பக்கங்கள்: பன்னிரண்டு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 7.00

சுடர்:16 வள்ளுவர் ஆண்டு 2032 ஐ. 8 வியாழக்கிழமை (25-10-2001) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்:333

# கேணல் உட்பட 7 படையினர் கிளைமோர் கண்ணிக்குப் பலி!

## குஞ்சர்கடை அருகே சம்பவம்

வடமராட்சி,ஒக்ரோபர்25

**யாழ். - பருத்தித்துறை பிரதான வீதியில், கரவெட்டி - குஞ்சர்கடைப் பகுதியில் நேற்று முற்பகல் 11.30 மணியளவில் இடம்பெற்ற கிளைமோர் தாக்குதலில் இராணுவத்தினரின் 'பிக்கப்' வாகனம் ஒன்று சிக்கி நாசமானது.**

**அதில் பயணம் செய்த லெப்டினன்ட் கேணல் ஒருவர் உட்பட 7 படையினர் அந்த இடத்திலேயே உயிரிழந்தனர். மேலும் ஒருவர் படுகாயமடைந்த நிலையில் பலாலி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.**

பலாலியில் சிவில் நிர்வாகப் பிரிவின் மூன்றாம்நிலைக் கட்டளை அதிகாரியான லெப்டினன்ட் கேணல் லயனல் விஜயகோனும் மற்றும் ஆறு படையினருமே இச்சம்பவத்தில் உயிரிழந்தனர்.

பலாலியில் இருந்து கடமை நிமித்தம் இவரும் மேலும் மூவரும் பருத்தித்துறைக்குச் சென்றுவிட்டு திரும்பிக்கொண்டிருந்ததாகவும் -

விடுமுறையில் சென்றுவிட்டு போர் முனைக்கு திரும்பிக்கொண்டிருந்த வேறு நான்கு படையினரும் இவர்களது 'பிக்கப்' வாகனத்தில் பயணித்துக் கொண்டிருந்ததாகவும் - தெரிவிக்கப்பட்டது.

அவர்களது 'பிக்கப்' குஞ்சர் கடையடியிலுள்ள சிறிய வைரவர் ஆலயம் அருகே வந்த சமயம் கிளைமோர் தாக்குதலுக்கு இலக்கானது. அங்கு நிறுத்தி வைக்கப்பட்டிருந்த சைக்கிள் ஒன்றில் மறைத்துவைக்கப்பட்டிருந்த கிளைமோர் மூலமே தாக்குதல் நடத்தப்பட்டிருக்கலாம் என்று கருதப்படுவதாகத் தகவல்

(12ஆம் பக்கம் பார்க்க)

## பொலீஸ் பாதுகாப்பு கோருகிறது பத்திரிகை

கொழும்பு,ஒக்.25

'த ஐலண்ட்', 'திவயின' பத்திரிகைகளை வெளியிடும் 'உபாலி நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்' நிறுவனம் தனது பணிமனைக்கு பொலீஸ் பாதுகாப்புக் கோரியுள்ளது.

பொதுமக்கள் ஐக்கிய முன்னணியைச் சேர்ந்த முன்னாள் பிரதி அமைச்சர் மேர்வின் சில்வா சில தினங்களுக்கு முன்னர் இந்தப் பத்திரிகை அலுவலகத்துக்குள் புகுந்து கலாட்டா செய்து அங்கிருந்தோருக்கும் கொலைப் பயமுறுத்தல் விடுத்ததாகச் செய்திகள் வெளியாகியிருந்தது தெரிந்ததே.

இதற்காகவும், பொதுமக்கள் ஐக்கிய முன்னணியில் இருந்து அண்மையில் ஐ.தே.கட்சிக்கு மாறிய முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவரை அநுராதபுரம் மகாபோதி வளவில் வைத்துத் தாக்கியதாகவும் மேர்வின் சில்வா மீது ஒழுங்கு நடவடிக்கை எடுக்க அவரது அணியான பொ.ஐ.மு. முடிவு செய்திருப்பதாகக் கொழும்புத் தகவல்கள் தெரிவித்தன.

(12ஆம் பக்கம் பார்க்க)

### பொதுத் தேர்தலுக்கு முன்பாக

## புலிகள் பற்றிய கட்சிகளின் நிலைப்பாட்டை அறிவிக்க மகாநாயக்கர்கள் கோரிக்கை

கொழும்பு,ஒக்.25

பொதுத் தேர்தலுக்கு முன்பாக ஒவ்வொரு அரசியல் கட்சிகளும் விடுதலைப் புலிகள் தொடர்பான தமது நிலைப்பாட்டைத் தெளிவுபடுத்த வேண்டுமென அனைத்துப் பீடங்களினதும் மகாநாயக்கர்கள் கூட்டாக வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

அஸ்கிரிய பீடத்தின் மகாநாயக்கர் அதி.சங்கைக்குரிய உடுகம வி. ரத்னபாலருத்ர தேரர், அமரபுர மகா சங்க சபாவின் மகாநாயக்கர் அதி. சங்கைக்குரிய மடிகே பஞ்ஞாசிக தேரர், இராமய நிக்காயாவின் மகாநாயக்கர், அதி.சங்கைக்குரிய வேலல் தெனியே நேதலங்கார தேரர் ஆகியோரே இந்த வேண்டுகோளை விடுத்துள்ளனர்.

இது குறித்து சகல கட்சிகளின் தலைவர்களுக்கும் கடிதங்களையும் இவர்கள் அனுப்பி வைத்துள்ளனர்.

அந்தக் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

பொதுத் தேர்தலுக்கு முன்பாக விடுதலைப் புலிகள் தொடர்பாகத் தாம் கொண்டுள்ள நிலைப்பாட்டை வெளியிடுவது ஒவ்வொரு கட்சிகளி

(12ஆம் பக்கம் பார்க்க)

## அடேல் பாலசிங்கம் எழுதிய புலிகள் பற்றிய புதிய நூல்!

கொழும்பு,ஒக்.25




விடுதலைப் புலிகள் இயக்கத்தின் இரண்டு தசாப்த காலச் செயற்பாடு மற்றும் அதன் தலைமைத்துவம் பற்றிய உள்ளகத் தகவல்கள் அடங்கிய - 'The Will to Freedom' (சுதந்திரத்திறகான துணிபு) என்ற - திருமதி அடேல் பாலசிங்கம் எழுதிய - நானூறு பக்க ஆங்கில நூல் லண்டனில் இவ்வாரம் வெளியிடப்பட்டிருக்கின்றது.

"தமிழ் மக்களின் எதிர்ப்புப் போராட்டம் குறித்து அறிய விரும்புவோருக்கு பயனுள்ள பல தகவல்களை இந்த நூல் கொண்டுள்ளது." - என்று அதனை வெளியிட்ட 'பயர் மக்ஸ்' வெளியீட்டகம் தெரிவித்துள்ளது.

"ஓரளவு சுயசரிதைப் போக்கில், சரித்திரப் பாணியில் எழுதப்பட்டுள்ள இந்தப் புத்தகம், கடந்த இரு தசாப்த கால தமிழ் சுதந்திரப் போராட்டத்தின் முக்கிய நிகழ்வுகள், திருப்பங்கள் ஆகியவற்றையும், தமிழ்ப் புலிகள் இயக்கத்தின் ஆயுதப் போராட்டத்தின் உள் விவகாரங்களையும் கொண்டுள்ளது" - என்றும் அந்த வெளியீட்டகம் தெரிவித்தது. (12ஆம் பக்கம் பார்க்க)

## கணேசமூர்த்தி நேற்று ஐ.தே.கவில் சேர்ந்தார்

கொழும்பு,ஒக்.25

முன்னாள் பிரதியமைச்சரான கணேசமூர்த்தி நேற்று பொ.ஐ.முன்னணியில் இருந்து வெளியேறி ஐ.தே.கட்சியில் இணைந்து கொண்டார்.

எதிர்வரும் பொதுத் தேர்தலில் ஐ.தே.கட்சி சார்பில் அவர் மட்டக்களப்பு மாவட்டத்தில் போட்டியிடவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

கடந்த மாதம் பொ.ஐ.முன்னணிக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணை விவாதத்துக்கு எடுத்துக் கொள்ளப்பட இருந்த தினத்தன்று கணேசமூர்த்தி ஐ.தே.கட்சிக்கு மாறுவார் என்று எதிர்பார்க்கப்பட்டது. எனினும் பின்னர் நாடாளுமன்றம் கலைக்கப்பட்டதைத் தொடர்ந்து கட்சி மாறுவதை அவர் ஒத்திப்போட்டிருந்ததாகக் கூறப்பட்டது.

நேற்றுக் காலை ஐ.தே.கட்சியின் தலைமை அலுவலகத்தில் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க முன்னிலையில் அவர் கட்சியின் உறுப்பினராக இணைந்துகொண்டார்.

(ம-4-3)

## ரூ.250 கோடி நஷ்டஈடு கோருகிறார் பீரிஸ்!

கொழும்பு,ஒக்.25

தமக்கு அவதூறு விளைவிக்கும் செய்திகளை வெளியிட்டதற்காக ரூபவாஹினி மற்றும் அரச கட்டுப்பாட்டில் உள்ள அஸோஸியேட்டட் நியூஸ் பேப்பர்ஸ் லிமிட்டெட் ஆகியவற்றுக்கு எதிராக தலா நூறு கோடி ரூபாவும் -

அமைச்சர் மங்கள சமரவீரவுக்கு

(12ஆம் பக்கம் பார்க்க)

## தமிழ்க் கட்சிகளின் கூட்டமைப்புக்கு கிடைக்கும் வெற்றி புலிகளுடையதே!

### ஜே.வி.பியும் கூக்குரலிடுகின்றது

கொழும்பு,ஒக்.25

தமிழ்க் கட்சிகளின் கூட்டமைப்பு உறுப்பினர்கள் நாடாளுமன்றத்துக்கு தெரிவு செய்யப்பட்டால் அது நாடாளுமன்றில் விடுதலைப் புலிகளின பிரதிநிதித்துவத்தையே வெளிப்படுத்தும். எனவே அந்தக் கூட்டமைப்பு பெறக்கூடிய வெற்றியை எப்படியாவது தடுத்து நிறுத்தவேண்டும்.

- இவ்வாறு குரல் எழுப்பியிருக்கின்றார் ஜே.வி.பியின் பிரசாரச் செயலர் விமல் வீரவன்ஸ.

ஜே.வி.பியின் நாடாளுமன்ற ஏற்பாடுகள் தொடர்பான கூட்டம் நேற்றுக் காலை கொழும்பு புதிய நகர மண்டபத்தில் நடைபெற்றபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தமிழ்க் கட்சிகளின் கூட்டமைப்பு பெறும் ஒவ்வொரு ஆசனமும் விடுதலைப் புலிகள் பெறும் வெற்றியாகவே இருக்கும்.

அத்துடன் ஐ.தே.கட்சியினர் விடுதலைப் புலிகளின் நேரடியான 'ஏஜெண்டு'களாகவே செயற்படுகின்றனர். முஸ்லிம் காங்கிரஸ் அம்பாறையை பிரித்துத் தருமாறு கேட்

(12ஆம் பக்கம் பார்க்க)

## கட்சி மாறும் படலம் தொடர்கின்றது

காலி மாநகர மேயர் லயனல் பிரேமசிறி ஆளும் பொதுமக்கள் ஐக்கிய முன்னணியிலிருந்து விலகினார்.

எதிர்வரும் பொதுத்தேர்தலில் ஐ.தே.கட்சியை ஆதரிக்கப்போவதாக அவர் கூறினார்.

சில தினங்களுக்கு முன்னர் மாத்தறை மாநகர மேயர் சுகத் அந்திரமன்ன பொ.ஐ.முன்னணியிலிருந்து விலகி எதிர்க்கட்சிகளின் பக்கம் சேர்ந்தது தெரிந்ததே.

(12ஆம் பக்கம் பார்க்க)

## சடலம் அடையாளம் காணப்பட்டது

வவுனியா,ஒக்.25

வவுனியா பூமாங்குளம் பகுதியில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற சம்பவத்தில் கொல்லப்பட்ட இரு இளைஞர்களில் ஒருவர் நேற்று அவரது உறவினர்களால் அடையாளம் காணப்பட்டார்.

(12ஆம் பக்கம் பார்க்க)

## கூட்டமைப்பில் தாங்கள் இடம்பெறாமைக்கு 4தமிழ்க் கட்சிகள் மீது புளொட் குற்றச்சாட்டு

கொழும்பு,ஒக்.25

நான்கு கட்சிகள் இணைந்து ஏற்படுத்தியுள்ள தமிழ்க்கட்சிகள் கூட்டமைப்பில் புளொட் அமைப்பு இணைய முடியாவிட்டால் அதற்கு அந்த நான்கு கட்சிகளுமே காரணம்.

- இவ்வாறு தெரிவித்துள்ளார் புளொட் அமைப்பின் தலைவர் தர்மலிங்கம் சித்தார்த்தன்.

கொழும்பு கோல்பேஸ் ஹோட்டலில் நேற்றுக் காலை தாம் நடத்திய செய்தியாளர் மாநாட்டிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:-

எதிர்வரும் தேர்தலில் நான்கு தமிழ்க்கட்சிகளின் கூட்டமைப்பில் எமது அமைப்பையும் இணக்க சமயப் பெரியார்கள் சிலரும், கல்விமான்கள் சிலரும் முயற்சி மேற்கொண்டுள்ளனர். அந்த முயற்சி வெற்றிபெறுமாயின் அந்தக் கூட்டமைப்பில் இணைந்து போட்டியிடுவோம். முயற்சி தோல்வியடைந்தால் தனித்துப் போட்டியிடுவோம்.

தமிழ் மக்களின் பிரச்சினைக்கு

(12ஆம் பக்கம் பார்க்க)

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

## வாழ்த்தும் பாராட்டும்



இளைப்பாறிய அதிபரும், சமூக சேவையாளருமாகிய

**செல்லையா தில்லைநாதன்**

**வேலுப்பிள்ளை மகேஸ்வரியுடன்**

இணைந்த நல்லறமாகிய இல்லற வாழ்வின்
50 ஆண்டு நிறைவு நாளில் (25-10-2001) இருவரும்
வளமெலாம் நிறைந்து பல்லாண்டு காலம் நலமாய் வாழ
பாராட்டி வாழ்த்துகின்றோம்.

'துவாரகை'
உடுவில் தெற்கு,
சுன்னாகம்.

பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்,
உறவினர்கள்,
நண்பர்கள்.

(93407)

## 31ஆம் நாள் நினைவஞ்சலி

தோற்றம் 06 - 06 - 1937



மறைவு 25 - 09 - 2001

**திருமதி**
**சின்னையா மகேஸ்வரி**

*வணங்குகின்றோம்*

அன்பினால் தெய்வம் ஆனாய்
ஆர்க்குமே உதவுகின்ற
பண்பினால் சிறந்து வாழ்ந்தாய்
பற்றினால் எம்மை எல்லாம்
கண்ணெனப் போற்றலானாய்
காலங்கள் பல சென்றாலும்
நின்னை நாம் மறத்தல் உண்டோ?
நெஞ்சத்தால் வணங்குகின்றோம்.

பிரிவால் துயருறும்:
பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், சகோதரர்கள்,
உற்றார், உறவினர்.

பாரதி வீதி,
கோண்டாவில் மேற்கு,
கோண்டாவில்.

(93796)

## சந்நிதியான் வாராந்த நிகழ்வு

தொண்டமனாறு சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவையினர், சந்நிதியான் ஆச்சிரம மண்டபத்தில் நடத்திவரும் வாராந்த நிகழ்வு நாளை வெள்ளிக்கிழமை காலை 10.30 மணிக்கு நடைபெறவுள்ளது.

'ஞானச்சுடர்' சஞ்சிகைக்கான வெளியீட்டுரையை பருத்தித்துறை தேசிய சேமிப்பு வங்கி முகாமையாளர் மா.பரமானந்தமும், மதிப்புரையை வடமராட்சி மத்திய மகளிர் கல்லூரி ஆசிரியர் க.நவரத்தினமும் நிகழ்த்துவர். (ம-7)

## உதைபந்தாட்டம்

வலி.வடக்கு,ஒக்.25

யாழ்ப்பாணம் கல்வி வலயத்துக்கு உட்பட்ட கோட்டங்களிடையே நடத்தப்பட்ட போட்டிகளில் தெரிவு செய்யப்பட்ட பாடசாலை அணிகளிடையேயான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியில் இன்று வியாழக்கிழமை பிற்பகல் 2.00 மணிக்கு யாழ். இந்துக் கல்லூரி மைதானத்தில் இடம்பெறவுள்ள ஆட்டங்களில் கலந்துகொள்ளவுள்ள அணிகளின் விவரம் வருமாறு:-

**16 வயதுப் பிரிவு**

★ யாழ்.புனித ஜேம்ஸ் ஆண்கள் வித்தியாலயம் எதிர் பெரியபுலம் மகா வித்தியாலயம்.

**18 வயதுப் பிரிவு**

★ யாழ். புனித ஜோசப் வித்தியாலயம் எதிர் அரியாலை கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலயம்.

★ யாழ். இந்துக் கல்லூரி எதிர் உரும்பிராய் இந்துக் கல்லூரி. (ம-86)

## பரீட்சைப் பெறுபேறுகள் வெளியாகின

யாழ்ப்பாணம்,ஒக்.25

யாழ்.சைவ பரிபாலன சபையினரால் கடந்த ஜூலை மாதம் நடத்தப்பட்ட ஜி.சீ.ஈ. உயர்தர மாணவருக்கான இந்து நாகரிகம், இந்து சமயம் ஆகிய பாடங்களுக்கான பரீட்சைப் பெறுபேறுகள் வெளியிடப்பட்டுள்ளன.

மேற்படி பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்களுக்கான பெறுபேறுகள் சம்பந்தப்பட்ட பாடசாலைகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன என்று சைவ பரிபாலன சபையின் பரீட்சைச் செயலாளர் சைவப்புலவர் வ.கந்தசாமி தெரிவித்தார். (ம-7)

## அங்குரார்ப்பணக் கூட்டம்

யாழ்ப்பாணம்,ஒக்.25

புதிதாக ஆரம்பிக்கப்படவிருக்கும் 'செவன் ஹெவன்' வானொலி ரசிகர் மன்றம் தொடர்பான அங்குரார்ப்பணக் கூட்டம் நாளை மறுதினம் சனிக்கிழமை மாலை 3 மணியளவில் கண்டுக்குளி மகளிர் கல்லூரி முன் ஒழுங்கையில் உள்ள மன்றக் காரியாலயத்தில் நடைபெறவுள்ளது.

இக்கூட்டத்தில் வானொலி ஆர்வலர்கள் அனைவரையும் கலந்துகொள்ளுமாறு மன்ற அமைப்பாளர் கேட்டுள்ளார். (ம)

## செய்முறைப் பரீட்சை

தென்மராட்சி,ஒக்.25

மீசாலை வீரசிங்கம் மகா வித்தியாலயத்தில் கல்வி கற்கும் ஜி.சீ.ஈ. சாதாரண தரப் பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களில் மனையியல் பாடத்திற்குத் தோற்றும் மாணவர்களுக்கான செய்முறைப் பரீட்சை எதிர்வரும் 28ஆம் திகதி திங்கட்கிழமை கரவெட்டி யாக்கருவில் இயங்கும் மேற்படி வித்தியாலயத்தில் நடைபெறுமென அதிபர் கு.சிவானந்தம் அறிவித்துள்ளார். (ம-117)

## பதினோராம் ஆண்டு நினைவலைகள்



**அமரர் கந்தையா ஜீவரட்ணம் (குமார்)**

(மினிபஸ் சாரதி)

அன்னை மடியில் : 17.07.1960



**திருமதி சுமதி ஜீவரட்ணம்**

அன்னை மடியில் : -----

ஆண்டவன் அடியில் 28.09.1990

திதி: 25.10.2001

காலங்கள் பதினோர் ஆண்டாய்க் கழிந்தன.
காவியமாய் நீங்கள் ஆனகதை விழிநீர் சொரிய...
காதகர்கள் செய்தவினை கனலாய் எரிய
காலனவன் உங்கள் உயிர் பறித்தானே!

உங்கள் நினைவோடு வாழும்:
ஐயா, அம்மா, சகோதர சகோதரிகள்,
மைத்துனர்கள், மருமக்கள்.

7,சென்மேரிஸ் 2ஆம் ஒழுங்கை,
கொழும்புத்துறை, யாழ்ப்பாணம்.

(C/18843)

## புத்தளத்தில் பிறந்த குழந்தைக்கு ஒஸாமா பின்லேடன் பெயர்

கொழும்பு,ஒக்.25

புத்தளத்தில் இருவாரங்களுக்கு முன்னர் பிறந்த குழந்தைக்கு, உலகின் ஒட்டுமொத்த கவனத்தையும் தன்பால் ஈர்த்துள்ள இஸ்லாமியத் தீவிரவாதி ஒஸாமா பின்லேடனின் பெயர் சூட்டப்பட்டது.

புத்தளம் - மன்னார் வீதியில் வசிக்கும் முஹமது சதாம் என்பவரே கடந்த 13ஆம் திகதி பிறந்த தனது இரண்டாவது குழந்தைக்கு முஹமது ஒஸாமா பின்லேடன் என்று பெயரிட்டுள்ளார்.

ஈராக் அதிபர் சதாம் ஹுசைனின் தீவிர அபிமானியான முஹமது சதாம், தற்போது ஒஸாமா பின்லேடனுக்கும் அபிமானியாகிவிட்டதாலேயே தனது குழந்தைக்கு பின்லேடனின் பெயரைச் சூட்டியதாகத் தெரிவிக்கப்பட்டது.

பின்லேடனின் பெயரைத் தனது மகனுக்குச் சூட்டியதோடு முஹம்மது சதாம் நின்றுகொள்வாரா? அல்லது தனது மகனை மற்றொரு பின்லேடன் ஆக்குவாரா என்பது குறித்து தெரியவில்லை. (ஒ)

## நவராத்திரி பாமாலை



### ஆதிபராசக்தி அருளடி பரவிடுவோம்!

வெண்டா மரையினில் வீற்றிருக்கும் எந்தம்
வாணிநல் அடிபணிவோம்.
பண்ணும் பதமும் பரதமும் தந்தருள்
பராசக்தி பதந் தொழுவோம்

செந்தா மரைமலர்ச் செந்திரு சேவடி
சேர்ந்து சேவித்திடுவோம்
நந்தா விளக்காய் நாளும் பொருள் சொரி
நற்றாயின் நலம் உரைப்போம்.

வீரந்திரு கல்வி வேண்டும் வரமருள்
வித்தகியை வணங்கிடுவோம்
ஆரமுதாமெம் ஆதிபராசக்தியின்
அருளடி பரவிடுவோம்!

திரு.டானியல் தேவமதுரம்.

### தேக்கமுறத் தந்தருள்வாய்!

உள்ளமெனும் கமலத்துள்
உறைகின்ற கலைவாணி
கள்ளொழுகும் புதுமலரால்
களிவுறவே அர்ச்சித்தேன்
விள்ளரிய வகையிலே
மிகவினிய கவிதைசெயத்
தெள்ளமுதத் தேன்மொழியைத்
தேக்கமுறத் தந்தருள்வாய்!

சிந்தனை வளர்த்தே என்னைச்
செயற்பட வைத்த தாயே
செந்தமிழ் மொழியில் ஆக்கம்
சிறப்புறச் செயநி னைந்து
வந்தனை புரிகின் றேனே
வளப்புறு பதத்தில் வீழ்ந்து
நிந்தனை புரிந்தி டாது
நிதமெனக் கருள்வாய் நீயே!

மண்ணவர் பலர்க்கும் நல்ல
மகிழ்வுறு கலைகள் தம்மை
விண்ணவர் தாமும் மிக்க
வியப்புறு வண்ணம் தந்து
கண்ணியம் உற்ற தாயே
கலைகளை எனக்கும் தந்து
கண்ணகல் ஞாலத் தென்னைக்
களிகொள வைப்பாய் நீயே!

பண்ணொடு பரதம் நல்ல
பாங்கமை பனுவல் தந்து
கண்ணென மதிக்கும் ஏனைக்
கலைகளும் தந்து நீயே
நுண்ணரு கலைகள் தம்மால்
நுவலரு புகழின் மேவத்
தண்ணுளம் கொண்டே என்றும்
தகைமையை மேலும் தாராய்

பொதிகை ச.திருப்பதி

### வாணி பதம் பணிவோம்!

வாணியின் பதம் பணிவோம் நல்வாக்கினைப் பெற்றிடுவோம்
வாழ்க்கையை நாம் வளமுடன் வாழ்ந்திடுவோம்
காணி நிலம் வேண்டுமென்று கைதொழுதே வணங்கிடுவோம்
காலமெலாம் கல்விதனைக் கருத்துடனே கற்றிடுவோம்
பேணியுனைப் போற்றுகின்றோம் பேதைமையைப் போக்கிடுவோம்
பொன்னே கண்மணியே பொற்பதம் பணிந்திடுவோம்
வீணிலலைந்து நாம் மிக்க வேதனையில் வீழ்ந்திடாமல் காக்கும்
நாமகளே கலைமகளே நற்றிருத்தாள் சரணமம்மா!

- கவிமணி இராசையா ஸ்ரீதரன்.

## அமெரிக்கக் குண்டு வீச்சில்

# குடியிருப்புகள் மீது தாக்குதல்: ஒப்புக்கொண்டது பென்டகன்!

வாஷிங்டன்,ஒக்.25

ஆப்கானிஸ்தான் காபூலில் குடியிருப்புப் பிரதேசங்களில் அமெரிக்க விமானங்கள் வீசிய குண்டுகள் வீழ்ந்து



தலிபான் மீது தாக்குதல் நடத்தத் தயாராகும் வடக்குக் கூட்டணிச் சிப்பாய்.

வெடித்துள்ளதை அமெரிக்க இராணுவத் தலைமையகமான பென்டகன் ஒப்புக்கொண்டுள்ளது.

நேற்றுமுன்தினம் மாலை பென்டகன் வெளியிட்ட செய்திக் குறிப்பில் இலக்குத் தவறிய குண்டுகள் பற்றி தெரிவிக்கப்பட்டிருந்தது.

தமது போர் விமானங்களின் விமானிகள் குண்டுவீச்சு இலக்குகளைத் தவறுதலாக நிர்ணயித்ததாலேயே, இந்தச் சம்பவங்கள் இடம்பெற்றதாக பென்டகன் கூறியுள்ளது.

காபூல்நகரில் கடந்த சனிக்கிழமை தலா 227 கிலோகிராம் எடை கொண்ட இரண்டு குண்டுகளும் -

கடந்த ஞாயிற்றுக்கிழமை ஹேரத நகரில் 454 கிலோகிராம் எடையுள்ள ஒரு குண்டும் -

மக்கள் குடியிருக்கும் பகுதிகளில் வீழ்ந்து வெடித்ததாக அமெரிக்கப் பாதுகாப்பு அமைச்சின் பேச்சாளர் விக்ரோரியா கெனெட் தெரிவித்தார்.

ஆயினும் தலிபான்கள் கூறுவது போல் பொது மருத்துவமனையோ, இராணுவ மருத்துவமனையோ அமெரிக்காவின் குண்டுத்தாக்குதல்களுக்குள்ளானதாகத் தகவல்கள் எவையும் தமக்குக் கிடைக்கவில்லை என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

அமெரிக்கா வீசிய குண்டுகள் குடியிருப்பு மருத்துவமனைகள் போன்றவற்றைத் தாக்கியதில் நோயாளிகள் உட்பட நூற்றுக்கணக்கான பொது மக்கள் உயிரிழந்ததாக முன்னதாக தலிபான்கள் அறிவித்திருந்தனர்.

இதற்கிடையில் -

நேற்று அமெரிக்கப்போர் விமானங்



குண்டுகளைச் சுமந்து வரும் அமெரிக்க விமானங்களை எதிர் நோக்கும் தலிபான் வீரர்.

களின் குண்டுவீச்சுக்குள்ளாகி கந்தகார் அருகே ஒரு கிராமத்தில் 52 பேர் உயிரிழந்ததாகவும்

அமெரிக்க விமானங்களின் குண்டுகளும் ஏவுகணைகளும் காபூலை சரமாரியாகத் தாக்கியதாகவும் தெரிவிக்கப்பட்டது. (ஒ-4)

## தலிபானை எதிர்த்துப் போராடும்

# வடக்குக் கூட்டணி மீதும் அமெரிக்கா தாக்குதல்!

## தவறுதலாக நேர்ந்துவிட்டதாம்

ஆப்கானிஸ்தானில் தலிபான்களின நிலைகள் மீது அமெரிக்க விமானங்கள் நேற்றுமுன்தினம் வீசிய குண்டுகள் இலக்குத்தவறி தலிபான்களை எதிர்த்துப் போராடி வரும் வடக்குக் கூட்டணியினரின் நிலைகள் மீது வீழ்ந்து வெடித்தன.

இராணுவநிலைகளை அடையாளம் காண்பதில் அமெரிக்க விமானிகள் தவறிழைத்ததாலேயே வடக்குக் கூட்டணியினரின் சில நிலைகள் குண்டு வீச்சுக்கு இலக்கானதாக அமெரிக்கப் பாதுகாப்பு அமைச்சக அதிகாரி ஒருவர் கூறினார்.

தலிபான்களின் கட்டுப்பாட்டிலிருந்த பகுதிகளைக் கைப்பற்றி வடக்குக் கூட்டணி அமைத்திருந்த நிலைகளே தவறுதலாகத் தாக்குதலுக்குள்ளாகியதாக அமெரிக்கா தெரிவித்தது.

இதேவேளை, வடக்குக் கூட்டணியினரின் நீண்டகால முகாம்கள் மீதே குண்டுகள் வீழ்ந்து வெடித்ததாக பாகிஸ்தானியச் செய்திகள் கூறுகின்றன. (ஒ)

## காஷ்மீர் தீவிரவாத அமைப்பினர் காபூலில் மரணம்!

இஸ்லாமாபாத்,ஒக்.25

ஆப்கானிஸ்தான் மீது அமெரிக்கா நடத்திவரும் தாக்குதலில், காஷ்மீர் தீவிரவாத இயக்கமான 'ஹர்கதுல் முஜாஹிதீனைச்' சேர்ந்த 35 பேர் கொல்லப்பட்டதாக அந்த இயக்கம் தெரிவித்தது.

காபூலில் தமது அமைப்பைச் சேர்ந்தவர்கள் தங்கியிருந்த வீடு குண்டு வீச்சுக்கு இலக்கானதால், அதிலிருந்தவர்கள் இறந்ததாகவும் ஹர்கதுல் முஜாஹிதீன்கள் தெரிவித்தனர். (ஒ-4)

# முஷாரப்பின்கூற்று வெட்டிப் பேச்சு என்று கூறுகிறார் பெர்னாண்டஸ்.

புதுடில்லி,ஒக்.25



இந்தியாவுக்கு நல்ல பாடம் புகட்டப்படுமென பாகிஸ்தானிய அதிபர் பர்வேஸ் முஷாரப் கூறியது வெட்டிப் பேச்சு என்று இந்தியப் பாதுகாப்பு அமைச்சர் ஜோர்ஜ் பெர்னாண்டஸ் தெரிவித்தார்.

எல்லைக்கப்பாலிருந்து இந்தியா தாக்குதல் நடத்தினால் அதற்கு நல்ல பாடம் புகட்டப்படும் என்று பாகிஸ்தானிய அதிபர் முஷாரப் தெரிவித்த கருத்துக்கு பெர்னாண்டஸ் சி.என்.என். தொலைக்காட்சிக்கு அளித்த பேட்டியில் இவ்வாறு பதிலளித்தார்.

பாகிஸ்தான் மீது இந்தியா போர் தொடுக்கும் பேச்சுக்கு இடமில்லை என்றும் -

கார்கில் பிரச்சினையின் போது கூட இந்திய இராணுவம் எல்லைக்கட்டுப்பாட்டுக் கோட்டை மதித்து அதனைக் கடக்காது இருந்ததாகவும் - பெர்னாண்டஸ் சுட்டிக்காட்டினார்.

இந்திய எல்லைக்குள் தீவிரவாதிகளை ஊடுருவச் செய்வதை பாகிஸ்தான் நிறுத்திக்கொள்ளவேண்டுமென்றும் அவர் வலியுறுத்தினார். (ஒ-4)

# 'போபர்ஸ்' பேர ஊழல் வழக்கில் சம்பந்தப்பட்டவர் இறந்தார்

புதுடில்லி,ஒக்.25

இந்திய அரசியலில் சர்ச்சையைக் கிளப்பிய 'போபர்ஸ்' பீரங்கிப் பேர ஊழல் வழக்கில் சம்பந்தப்பட்ட முக்கிய நபர்களில் ஒருவரான வின்சிந்தா நேற்றுமுன்தினமிரவு புதுடில்லியில் காலமானார். அவருக்கு வயது 77.

சில மாதங்களுக்கு முன்னர் 'போபர்ஸ்' ஊழல் வழக்கில் குற்றஞ் சாட்டப்பட்ட மற்றொரு முக்கிய நபரான, இந்திய பாதுகாப்பு அமைச்சக முன்னாள் செயலாளர் எக்-கே பட்நாகர் புற்றுநோயால் காலமானார்.

மறைந்த பிரதமர் ராஜீவ்காந்தி பதவியில் இருந்தபோது இந்திய இராணுவத்துக்கு பீரங்கிகள் சுவீடனில் 'போபர்ஸ்' நிறுவனத்திடமிருந்து வாங்கப்பட்டன. இதற்கான பேரத்தில் சுமார் 64 கோடி ரூபா ஊழல் நடந்திருப்பதாகவும் -

ராஜீவ்காந்திக்கும் அதில் பங்கிருப்பதாகவும் - குற்றச்சாட்டுகள் எழுந்தன. இது தொடர்பாக வழக்கும் பதிவு செய்யப்பட்டது. ஆயினும் பல ஆண்டுகளாக இந்த வழக்கு முடிவின்றி தொடரும் நிலையில், அதில குற்றஞ்சாட்டப்பட்டவர்கள் இறந்து வருகிறார்கள். ஆகவே 'போபர்ஸ்' பேர ஊழல் வழக்கில் குற்றவாளிகள் தண்டனை பெறுவது நடக்காத காரியமாகவே கருதப்படுகிறது.

# சர்வதேச விண்வெளி நிலையத்தில் முதல் ஐரோப்பியப் பெண்மணி

மொஸ்கோ,ஒக்.25

பிரெஞ்ச் விண்வெளி வீராங்கனை திருமதி கிளோடி ஹெய்ட்னர் சர்வதேச விண்வெளி நிலையத்துக்குச் சென்ற முதல் ஐரோப்பியப் பெண்மணி என்ற பெருமையைப் பெற்றுள்ளார்.

ரஷ்ய விண்வெளி வீரர்கள் இருவருடன் இவர் சர்வதேச விண்வெளி நிலையத்துக்குச் சென்றுள்ளார்.

திருமதி கிளோடி சர்வதேச விண்வெளி நிலையத்துக்குள் நுழைவதை ரஷ்ய விண்வெளி நிலையத்திலிருந்து பார்வையிட்ட பிரெஞ்ச் பிரதமர் லியோனல் ஜோஸ்பின் அவருக்குப் பாராட்டுத் தெரிவித்தார்.

எடை உணரமுடியாத நிலையில் பல நாள்கள் இருப்பதால் மனித உடலுக்கு ஏற்படக்கூடிய பாதிப்புகள் குறித்து சர்வதேச விண்வெளி நிலையத்தில் கிளோடியா ஆராயவுள்ளார்.

இந்தக் குழுவினர் எதிர்வரும் 31 ஆம் திகதி பூமிக்குத் திரும்பவுள்ளனர். (ஒ-4)

## ஆதரவின்றி உயிர்தப்ப ஓடிவரும்

# ஆப்கானிஸ்தானிய அகதிகளிடம் பாகிஸ்தானிய அதிகாரிகள் லஞ்சம்

சமான்,ஒக்.25

பாகிஸ்தானுக்குள் நுழைய விடுவதற்காக ஆப்கானிஸ்தானிய அகதிகளிடம் பாகிஸ்தானிய அதிகாரிகள் லஞ்சம் பெற்று வருவதாகக் கூறப்படுகிறது.

ஆப்கானிஸ்தான் மீது அமெரிக்கா தாக்குதல் நடத்தத் தொடங்கியதிலிருந்து இதுவரை சுமார் 60 ஆயிரம் பேர் பாகிஸ்தானுக்குள் அகதிகளாக நுழைந்துள்ளனர்.

அளவுக்கதிகமான அகதிகள் வருவதைத் தடுப்பதற்காக பாகிஸ்தான் தனது எல்லை நுழைவுப் பாதைகளைத் தொடர்ந்து மூடியே வைத்திருப்பதால், அகதிகள் பாகிஸ்தானுக்குள் இரகசியமாக நுழைவதற்காக பாகிஸ்தானிய அதிகாரிகளுக்கு லஞ்சம் கொடுத்து வருவதாக அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன. பணமாக மட்டுமன்றி உடைகள், துணிகள், உலோக பாவனைப் பொருள்கள் ஆகியவற்றைக் கூட பாகிஸ்தானிய அதிகாரிகள் ஆப்கானிஸ்தானிய அகதிகளிடம் லஞ்சமாகப் பெற்றுக்கொள்வதாகக் கூறப்படுகிறது.

உலக அரங்கில்

அப்படிக் கொடுக்க முடியாத, ஏழ்மையான ஆயிரக்கணக்கான அகதிகள் எல்லைப் பகுதிகளில் உள்ள மலையடி வாரங்களில் தங்கியுள்ளனர். இவர்களில் சுமார் 6 ஆயிரம் பேர் சிறுவர்கள் ஆவர்கள். இந்த அவல நிலையைப் போக்க எல்லைகளைத் திறந்து அகதிகளை நுழையவிடுமாறு அகதிகளுக்கான ஐ.நா. தூதரகம் பாகிஸ்தானிய அரசைக் கோரியுள்ளது.

இதேவேளை -

காபூலில் இருந்து ஜலலாபாத் வந்தடையும் பெரும் எண்ணிக்கையிலான ஆப்கானிய அகதிகள் பெரும் ஆபத்துக்களின் மத்தியில் ஆள்கடத்தல்காரர்களுக்கு பணம்கொடுத்து, அவர்கள் மூலம் பாகிஸ்தானுக்குள் நுழைவதாக அகதிகளுக்கான ஐ.நா. தூதரகம் தெரிவித்துள்ளது.

சோவியத் ஆக்கிரமிப்பு சமயத்தில் ஆப்கானிஸ்தான் எல்லையில் புதைக்கப்பட்ட கண்ணிவெடிகள் இன்னும் அகற்றப்படாமல் உள்ளன என்றும் -

அத்தகைய கண்ணிவெடிகள் நிறைந்த ஆபத்தான பாதைகள் ஊடாக ஏறக்குறைய 15 மணித்தியாலங்கள் தொடர்ந்து நடந்து சிறுவர்கள், பெண்கள் உட்பட அகதிகள், பாகிஸ்தானுக்குள் இரகசியமாக நுழைவதாகவும் - கூறப்படுகிறது. (ஒ-4)

# ஐரிஷ் குடியரசு இராணுவத்தினர் ஆயுதங்களைக் கைவிடச் சம்மதம்

ஐரிஷ் குடியரசு இராணுவம் ஆயுதங்களைக் கைவிட்டு, நிராயுதபாணியாவதாக உறுதியளித்துள்ளது.

பிரிட்டனின் கட்டுப்பாட்டில் உள்ள வட அயர்லாந்தை, அயர்லாந்துடன் இணைக்கப் போராடும் ஐரிஷ் குடியரசு இராணுவம் பிரிட்டிஷ் அரசுடன் நடத்தப்பட்ட பேச்சுக்களின் முடிவில், தனது ஆயுதங்களைப் பயன்படுத்தாது, ஆயுதக் கிடங்கிலேயே வைத்திருக்கச் சம்மதித்துள்ளது.

ஐரிஷ் குடியரசு இராணுவம், ஆயுதங்களைப் பயன்படுத்தாது வைக்கத் தொடங்கியுள்ளதாக வட அயர்லாந்தின் சுயாதீனமான ஆயுதக் குறைப்பு சம்பந்தமான சர்வதேச ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

பிரிட்டனுடனான ஒப்பந்தத்துக்கு அமைய, ஐரிஷ் குடியரசு இராணுவம் ஆயுதங்களைக் களைந்துள்ளதாகவும் -

இதனால் வட அயர்லாந்தில் அமைதி முயற்சியில் முன்னேற்றம் ஏற்பட்டிருப்பதாகவும் - ஆணைக்குழு மேலும் தெரிவித்தது.

இதற்கிடையில் - அமெரிக்க வெளியுறவு அமைச்சர் கொலின்பவல், வட அயர்லாந்து தலைவர்களைச் சந்தித்து அமைதிப் பேச்சுக் குறித்து பேச்சு நடத்தியதாகக் கூறப்படுகிறது. (ஒ-4)

## ஐ.நாவின் ஆண்டுவிழா

நியூயோர்க்,ஒக்.25


ஐநாவின் 56 ஆவது ஆண்டுவிழா நேற்றுக் கொண்டாடப்பட்டது. இது தொடர்பாக ஐ.நா. வெளியிட்ட செய்தியில், ஐ.நா. ஸ்தாபனம், சர்வதேச சமூகத்தின் சார்பில் பெரும் பங்கை வகிக்கவேண்டிய பொறுப்பை ஏற்றுக்கொண்டிருப்பதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஒ)

# உடலின் உள்ளே படம் பிடிக்கும் 'கமெரா மாத்திரை' அறிமுகம்

உடலின் உட்பகுதியைப் படம் பிடிக்கும் 'கமெரா மாத்திரை' அவுஸ்திரேலியாவில் கடந்த வாரம் அறிமுகப்படுத்தப்பட்டது.

13 நோயாளிகளில் வெற்றிகரமாக இந்தக் 'கமெரா மாத்திரை' பரிசோதித்தும் பார்க்கப்பட்டது.

இஸ்ரேலிய இராணுவத் தொழில் நுட்பவியல் துறையினர், அமெரிக்க விண்வெளி ஆய்வுமையமான 'நாஸா'வுடன் இணைந்து இந்த 'கமெரா மாத்திரை'யை உருவாக்கியுள்ளனர்.



'வீடியோ' ஒளிப்பதிவுக் கருவி, சிறிய ஒளிமுதல், நுண்ணிய பரிமாற்றி (TRANSMITTER) அன்ரெனா மற்றும் மின்கலம் ஆகியவற்றை உள்ளடக்கி இந்த 'கமெரா மாத்திரை' தயாரிக்கப்பட்டுள்ளது.

இந்தக் 'கமெரா மாத்திரை' உடலினுள் ஏற்படும் இரத்தக் குடல்புண்கள் போன்றவற்றைக் கண்டுபிடிக்க உதவும். இந்த மாத்திரையை நோயாளி மருந்து மாத்திரையைப் போன்று விழுங்கினால் அது உணவுக்குழாய் மூலம் பயணித்து உட்புறத்தைப் படம் பிடிக்கும்.

நோயாளியின் வயிற்றில் கட்டப்படும் பட்டியில் இணைக்கப்பட்ட கட்டுப்பாட்டுக் கருவி மூலம் 'கமெரா மாத்திரையை' உடலுக்குள் தேவையான இடங்களில் திருப்பிப் படம்பிடிக்க முடியும். பின்னர் இந்த மாத்திரை மூலம் ஒளிப்பதிவு செய்யப்பட்டவற்றை மருத்துவர் பார்வையிட்டு சிகிச்சை குறித்து ஆலோசிக்க முடியும்.

வாய் மூலம் குழாய் ஒன்றைச் செலுத்தி அதனூடாக நீண்ட கம்பியில் இணைக்கப்பட்ட கருவியை உடலினுள் நுழைத்து இதுவரை உறுப்புகள் படம் பிடிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

## திருமறைக் கலாமன்றத்தின் ஏற்பாட்டில்

# சிங்களக் கலைஞர்கள் 45 பேர்

# அடுத்த வாரம் யாழ். வருகின்றனர்

யாழ்ப்பாணம், ஒக். 25 திருமறைக்கலாமன்றத்தின் ஏற்பாட்டில் கலைப் பயணம் ஒன்றை மேற்கொண்டு சுமார் 45 சிங்களக் கலைஞர்கள் அடுத்த வாரம் யாழ்ப்பாணம் வருகின்றனர்.

திருமறைக் கலாமன்றத்தின் 'கலைப்பாலம்' ஏற்பாட்டின் ஒரு கட்டமாக இங்கு அழைத்து வரப்படும் இவர்கள் சுமார் ஒருவாரம் யாழ்ப்பாணத்தில் தங்கியிருந்து பல்வேறு கலை நிகழ்வுகளில் பங்குபற்றுவர் என்று தெரிவிக்கப்படுகிறது.

சிங்கள மொழியில் பிரசித்தி பெற்ற கலை வடிவங்களான கோலம், சொக்கரி, தொவில் கண்டிய நடனம் போன்ற நிகழ்வுகளையும் அவர்கள் இங்கு நிகழ்த்தவுள்ளனர்.

இந்தக் கலைஞர்களில் அனேகமானோர் பாணத்துறையிலுள்ள திருமறைக் கலாமன்றத்தின் அங்கத்தவர்கள் என்றும் —

அண்மையில் திருமறைக் கலாமன்றம் கொழும்பில் நடத்திய தமிழ் விழாவின் போது மூவினக் கலைஞர்களும் இணைந்து நடித்த அசோகா என்ற மௌன நாடகத்தில் பங்குபற்றியவர்கள் எனவும் —

திருமறைக்கலாமன்றப் பிரமுகர் ஒருவர் தெரிவித்தார்.

இன, மத பேதங்களைக் கடந்த சமாதானத்துக்கான தேடலும், மனிதநேயம், புரிந்துணர்வு என்பவற்றை வளர்ப்பதுமே இந்தக் கலைஞர்களின் வருகையின் நோக்கம் எனவும்—

இந்தக் கலைஞர்களை குடாநாட்டின் பல பகுதிகளுக்கும் அழைத்துச் சென்று இங்குள்ள நிலைமைகளை எடுத்து விளக்க விருப்பதாகவும் —

அவர் மேலும் தெரிவித்தார்.

கடந்த இரண்டு தசாப்தங்களில் தென்பகுதியில் இருந்து கலைப் பயணத்தை மேற்கொண்டு சிங்களக் கலைஞர்கள் யாழ்ப்பாணம் வருவது இதுவே முதல் தடவை என்பது குறிப்பிடத்தக்கது. (க-4)

## மாவைக்கந்தன் பக்தர்களின் கவனத்துக்கு!

தெல்லிப்பழை, ஒக். 25 மாவைக்கந்தன் ஆலய ஐப்பசி வெள்ளி ஆராதனைகளுக்கு அங்கு வருகை தரும் பக்தர்கள் காலை 10.30 மணிக்கு முன்னர் தெல்லிப்பழை சோதனைச்சாவடிக்கு வந்து சேருமாறு ஆலய நிர்வாகம் அறிவித்துள்ளது.

பக்தர்களின் பிரயாண வசதிகள் கருதியே இந்த அறிவிப்பு விடுக்கப்பட்டுள்ளது.

பூஜைகள் பூர்த்தியானதும் பிற்பகல் 2.30 மணியளவில் ஆலயத்திலிருந்து திரும்பவும் வசதிகள் செய்யப்பட்டுள்ளன. (க)

# காணாமற்போனோர் குறித்து அதிகாரிகள் மெத்தனப் போக்கு

## பாதுகாவலர் சங்கம் விசனம்

யாழ்ப்பாணம், ஒக். 25 காணாமற்போனோர் பற்றிய தகவல்களைத் தமக்குப் பெற்றுத் தருவதில் சம்பந்தப்பட்ட அதிகாரிகள்தொடர்ந்து மெத்தனப் போக்கைக் கடைப்பிடித்து வருவதால், தாம்போராட்டத்தில் இறங்க வேண்டிய நிர்ப்பந்தம் உருவாகியுள்ளதாகக் காணாமற்போனோரின் பாதுகாவலர் சங்க வட்டாரங்கள் தெரிவித்தன.

குடாநாட்டில் 1996 - 1997 ஆம் ஆண்டுக் காலப்பகுதியில் வீடுகளிலும், வீதிச் சோதனை நிலையங்களிலும் கைது செய்யப்பட்டுப் பின்னர் காணாமற்போனோரின் கதி குறித்து 3 வாரங்களுக்குள் தகவல் பெற்றுத் தருமாறு சம்பந்தப்பட்ட உயர் அதிகாரிகளைக் காணாமற்போனோர் பாதுகாவலர் சங்கம் கோரியதாகவும்—

கால அவகாசம் முடிவடையும் தறுவாயிலும் தாம் கோரிய விவரங்கள் இதுவரை கிடைக்கவில்லை என்றும் —

சங்கத் தலைவர் செல்வராசா விசனம் தெரிவித்தார்.

தாம் கொடுத்த கால அவகாசத்துக்குள் அரச அதிபரின் சாதகமான பதில் தமக்குக் கிடைக்காது விட்டால், யாழ். செயலகம் முன்பாக தாம் ஏற்கனவே திட்டமிட்டபடி மறியற் போராட்டம் நடத்தப்போவதாகவும் சங்கத்தினர் மேலும் தெரிவித்தனர். (ஒ 9)

## அளவெட்டி கிராமஅலுவலர் பிரிவுகளில்

# பொதுஇடங்கள், மயானங்களில் பெருமளவு பனம் விதை நடுகை

வலிகாமம் தெற்கு, ஒக். 25 குடாநாட்டில் பனை வளத்தைப் பெருக்கும் நோக்குடன் அளவெட்டி மேற்கு, அளவெட்டி தெற்கு கிராம அலுவலர் பிரிவுகளில் 8 ஆயிரம் பனம் விதைகள் நடப்பட்டுள்ளன.

அளவெட்டி முற்போக்கு வாலிபர் சங்கத் தலைவர் இ. சிவநாயகம் தலைமையில் அளவெட்டிப் பகுதிகளில் உள்ள பொது மயானங்கள் மற்றும் பொது இடங்களில் பனம் விதைகள் நடப்பட்டன.

அளவெட்டி மேற்கில் கொட்டுப் பனை மயானம், தம்பவளை மயானம் ஆகிய இடங்களிலும், அளவெட்டி தெற்கில் பினாக்கைக்குளம், பிரான்சிக்குளம், கிளவனை குளம், அம்பலவன் குளம் ஆகிய இடங்களிலும் பனம் விதைகள் நடப்பட்டுள்ளன.

வலிகாமம் வடக்குப் பிரதேசசபைத் தலைவர் இதன்போது பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு பனம் விதை நடுகையை ஆரம்பித்து வைத்தார்.

பனை அபிவிருத்திச்சபை உறுப்பினர்கள், கிராமசேவை அலுவலர்கள், கிராம அபிவிருத்திச்சங்க உறுப்பினர்கள் மற்றும் விவசாயிகள், பொதுமக்கள் பலரும் இந் நிகழ்ச்சியில் கலந்துகொண்டனர். (க—182)

## சணல் செய்கை

புன்னாலைக்கட்டுவன், ஒக். 25 புன்னாலைக் கட்டுவன், ஈவினை, குப்பிளான் பிரதேச விவசாயிகள் சணல் செய்கையில் ஈடுபட்டுள்ளனர்.

வன்னிப்பகுதியில் இருந்து மாட்டெரு எடுத்துவர முடியாததை அடுத்தே சணல் பயிரிடப்பட்டு பசளையாக்கப் படவுள்ளது.

இன்னும் இரண்டு வாரங்களில் சணல்பயிர் பூக்கும் தறுவாயில் அறுவடை செய்து மண்ணுக்குள் வெட்டிப் புதைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. (க-133)

## சக்கர வண்டிகளை திருத்தித் தர நடவடிக்கை

யாழ்ப்பாணம், ஒக். 25 யாழ்ப்பாண பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட பகுதியில் வசிக்கும் பழுதடைந்த முச்சக்கரவண்டி, இருசக்கர வண்டிகளை வைத்திருக்கும் ஊனமுற்றோரை பிரதேச செயலகத்துடன் தொடர்பு கொள்ளுமாறு பிரதேச செயலர் கேட்டுள்ளார்—

' அகதிகளுக்கான ஐ நா. தூதரகம் இந்த வண்டிகளை இலவசமாகத் திருத்திக் கொடுக்க நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளதால் உரியவர்கள் தமது கிராம உத்தியோகத்தர் மூலம் பிரதேச செயலகத்துடன் தொடர்பு கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது. (க—180)

## திருட்டுக்கள் வெகுவாகக்குறைவு

வலிகாமம் தெற்கு, ஒக். 25 சுன்னாகம் மேற்கு கிராம சேவையாளர் பிரிவில் செயற்பட்டு வரும் விழிப்புக்குழுவினர் மற்றும் இராணுவத்தினரின் செயற்பாடுகளால் அண்மைக் காலங்களில் இப்பகுதியில் நிலவி வந்த திருட்டுச் செயல்கள், மிரட்டல்கள், அடாவடித்தனங்கள்போன்ற குற்றச் செயல்கள் வெகுவாகக் குறைந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

விழிப்புக்குழுவினரும், 513 ஆவது படையணியைச் சேர்ந்த இராணுவத்தினரும் இப்பகுதியில் அண்மைக் காலங்களில் இரவு நேர ரோந்துப் பணிகளில் ஈடுபட்டு வருகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது. (க-152)

## 39குடும்பங்களுக்கு மலசலகூடங்கள்

யாழ்ப்பாணம், ஒக். 25 யாழ்ப்பாணம் பிரதேச செயலர் பிரிவில் உள்ள வீடமைப்புத் திட்டங்களில் வசிக்கும் 39 வசதிகுறைந்த குடும்பங்களுக்கு 'யுனிசெவ்' நிறுவனம் இலவசமாக மலசல கூடங்களை அமைத்துக் கொடுக்கவுள்ளது.

நாவாந்துறை மண்வெட்டி வீடமைப்புத் திட்டத்தில் உள்ள 22 குடும்பங்களுக்கும், கோட்டை குடும்பச்சோலை புரம் வீடமைப்புத் திட்டத்தில் 6 குடும்பங்களுக்கும், கொட்டடி முத்தமிழ் வீதி வீடமைப்புத் திட்டத்தில் உள்ள 11 குடும்பத்திற்குமே தலா 15 ஆயிரம் ரூபா செலவில் இந்த மலசல கூடங்கள் அமைத்துக் கொடுக்கப்படவுள்ளன. (க-180)

## நிதி ஒதுக்கீடு

யாழ்ப்பாணம், ஒக். 25 யாழ்ப்பாண பிரதேச செயலர் பிரிவில் 20 புனரமைப்பு பணிகளுக்கென 12 லட்ச ரூபா பன்முகப்படுத்தப்பட்ட வரவு — செலவுத்திட்டத்தின் கீழ் ஒதுக்கப்பட்டுள்ளது. (க-180)

## கல்வி அலுவலகங்கள், பாடசாலைகளில்

# தொண்டர் அடிப்படையில் பணிபுரியும் ஊழியர் விவரம்

## அனுப்ப மாகாண அமைச்சு கோரிக்கை

யாழ். மாவட்டத்தில் உள்ள வலயக் கல்வி அலுவலகங்கள், கோட்டக் கல்வி அலுவலகங்கள் மற்றும் பாடசாலைகளில் தொண்டர் அடிப்படையில் அல்லது பதிலீட்டு அடிப்படையில் கடமையாற்றும் ஊழியர்களது விவரங்களை வடக்கு — கிழக்கு மாகாணக் கல்வி அமைச்சுக்கு அனுப்பி வைக்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

கடமைபுரியும் இடம், நியமனத் திகதி ஆகியவை உட்பட ஊழியர்களின் விவரங்களைக் குறிப்பிட்டு அத்துடன் நியமனக் கடிதம், பிறப்பு அத்தாட்சிப் பத்திரம், கல்விச் சான்றிதழ்கள் ஆகியவற்றின் பிரதிகளுடன் உடனடியாக அனுப்பி வைக்குமாறு சகல வலயக் கல்விப் பணிப்பாளர்களும் மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளரும் கேட்கப்பட்டுள்ளனர். (க-10-51)

# நவராத்திரி விழா நிகழ்வுகள்

யாழ்ப்பாணம், ஒக். 25

★ கோப்பாய்ஆசிரியர்பயிற்சிக் கலாசாலை இந்துமாமன்றத்தின் நவராத்திரி விழா இன்று காலை 10 மணிக்கு நடைபெறவுள்ளது.

★ வலி. வடக்குப் பிரதேச சபை அலுவலகத்தில் இன்று காலை 10 மணிக்கு வாணி விழா நடைபெறும். தொடர்ந்து கலை நிகழ்ச்சிகளும் இடம்பெறும்.

★ யாழ். மாவட்ட தேசிய வீடமைப்பு அதிகார சபையின் நவராத்திரி விழா இன்று முற்பகல் 11 மணிக்கு நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வில் 'செஞ்சொற்செல்வர்' ஆறு திருமுருகனின் சிறப்புச் சொற்பொழிவும் இடம்பெறவுள்ளது.

★ கந்தரோடை தமிழ்க் கந்தையா வித்தியாசாலையின் விஜயதசமி விழாவும் வித்தியாரம்பமும் நாளை வெள்ளிக்கிழமை நடைபெறவுள்ளது.

★புங்குடுதீவுப்பிரதேசசபை உப அலுவலகத்தின் வாணி விழா நாளை வெள்ளிக் கிழமை நடைபெறவுள்ளது.

★ தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்காதேவி ஆலயத்தில் நாளை வெள்ளிக்கிழமை காலை 10 மணிக்கு விஜயதசமி விழாவும் அதனைத் தொடர்ந்து வித்தியாரம்பமும் இடம் பெறும்.

★ யாழ்ப்பாணம் சைவபரிபாலன சபையின் விஜயதசமி விழா நாளை வெள்ளிக் கிழமை நடைபெறவுள்ளது.

★ மல்லாகம் மத்திய மகா வித்தியாலயத்தின் நவராத்திரி விழா நாளை வெள்ளிக் கிழமை நடைபெறவுள்ளது' (க-10-86-152)

★ சண்டிலிப்பாய் பிரதேச செயலக நலன்புரிச் சங்கத்தினர் நடத்தும் நவராத்திரி

(9 ஆம் பக்கம் பார்க்க)


## பாடசாலை உபகரணம் வழங்கல்

ஞானியார் கல்விக் கழகத்தினால் தெரிவு செய்யப்பட்ட வசதிகுறைந்த மாணவர்களுக்கு 21-10-2001 அன்று பாடசாலை உபகரணங்கள் வழங்கிய நிகழ்வில் கலந்து கொள்ளத் தவறியவர்கள் எதிர்வரும் 15-11-2001 ஆம் திகதிக்கு முன்னதாக ''வெளாநர், பன்னக்கட்டை, பருத்தித்துறை'' என்ற கழக அலுவலக முகவரியில் வந்து பொருள்களைப் பெற்றுக்கொள்ளும் படி கேட்டுக்கொள்கின்றோம்.

கடந்த 19-10-2001 அன்று பிரசுரமாகிய விளம்பரத்தில் இம்பர்சிட்டி என்பது இன்பர்சிட்டி என தவறுதலாக இடம்பெற்றுள்ளது என்பதனையும் அறியத் தருகின்றோம்.

தலைவர்

இம்பர்சிட்டி, பருத்தித்துறை — ஞானியார் கல்விக்கழகம்.

(93809)



யா/தொண்டமானாறு

## வீரகத்திப்பிள்ளை மகா வித்தியாலயம்

# வாணி விழாவும் வள்ளுவர் விழாவும் 2001

காலம்: நாளை (26-10-2001)
வெள்ளிக்கிழமை மு ப. 9.30 மணி

இடம்: பாடசாலைப் பிரார்த்தனை மண்டபம்

தலைவர்
திரு. ந. அரியரத்தினம் அவர்கள் ( அதிபர்)

பிரதம விருந்தினர்:
திருமதி மங்கையர்க்கரசி சிற்றம்பலம் அவர்கள்
(ஓய்வுபெற்ற அதிபர், யா/இராமநாதன் கல்லூரி)

★ பாடசாலையில் இடம்பெற்ற திருக்குறள் போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்கான பரிசில் வழங்கலும் மாணவர்களின் கலை நிகழ்ச்சிகளும் இடம்பெறும்.

★ இவ்விழா சந்நிதியான் ஆச்சிரம ஆதரவில் இடம் பெறுகிறது.

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

## வாழ்த்துகின்றோம்

2001 ஆம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியெய்திய எமது பாடசாலை மாணவர்களை இச்சந்தர்ப்பத்தில் வாழ்த்துவதில் பெருமகிழ்ச்சி அடைகின்றோம்.

| | | |
|---|---|---|
| கு. நிலாநிதி | — | 132 புள்ளிகள் |
| ஜெ. நம்யா | — | 123 புள்ளிகள் |
| கு. சஞ்சீப் | — | 119 புள்ளிகள் |

அதிபர், ஆசிரியர்கள்,
மாணவர்கள், ஊழியர்கள்,
பாடசாலை அபிவிருத்திச் சங்கம்,
பழைய மாணவர் சங்கம். (93819)

# உதயன்

## தேர்தலும் பாதுகாப்பும்

"யாழ்.மாவட்டத்தில், தேர்தல் நீதியும் நியாயமுமாக நடத்தப்படுவதை உறுதி செய்யும் வகையில் அங்கு விசேட பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்படும். ஏனைய மாவட்டங்களில் நடைமுறைப்படுத்தப்படும் பாதுகாப்பு ஏற்பாடுகளை விடவும் அங்கு பாதுகாப்புத் தீவிரமாக இருக்கும்.

"அங்கு வெளிநாட்டுக் கண்காணிப்பாளர்களும் கூடுதலாக அனுப்பப்படுவர்; உள்நாட்டுக் கண்காணிப்பாளர்களையும் அதிகளவில் ஈடுபடுத்துமாறு அறிவுறுத்தவுள்ளேன்."

- இப்படித் தெரிவிக்கின்றார் தேர்தல் ஆணையாளர் தயானந்த திஸநாயக்கா.

கடந்த இரண்டு பொதுத் தேர்தல்களின்போதும் அதிகளவில் தேர்தல் மோசடிகள், குளறுபடிகள் இடம்பெற்றதாக குற்றம் சுமத்தப்பட்ட இடம் யாழ்ப்பாண மாவட்டம்தான்.

கடந்த பொதுத் தேர்தலின்போது தீவுப் பகுதியில் உள்ள வாக்குச்சாவடிகளில் கடமையாற்ற முன்வந்த ஒரேயொரு மாற்றுக்கட்சித் தேர்தல் வாக்களிப்பு முகவர்களும் கூண்டோடு கடத்தப்பட்ட சம்பவம் குடாநாட்டில் நடந்தது நாம் அறிந்ததே. ஆள்மாறட்டமும், கள்ள வாக்குப் போடுதலும் அதிகளவில் இடம்பெற்றதாகவும் பரவலாகக் குற்றஞ்சுமத்தப்பட்டிருந்தது.

அந்த வகையில் குடாநாடு குறித்து இம்முறை தேர்தல் ஆணையாளர் அதிக சிரத்தை எடுத்திருப்பது வரவேற்கத்தக்கது.

அரசமைப்பின் 17 ஆவது திருத்தத்தின் கீழ் தனக்கு வழங்கப்பட்டுள்ள புதிய அதிகாரங்களை முழு அளவில் பிரயோகிக்கத் தேர்தல் ஆணையாளர் உறுதிபூண்டிருப்பதாக தேர்தல் திணைக்கள வட்டாரங்கள் தெரிவித்திருக்கின்றன. தேர்தல் நீதியாக நடத்தப்படுவதற்கு இது நல்லதோர் சமிக்ஞை.

பொதுத் தேர்தல் அறிவிக்கப்பட்ட பின்னர், ஆளுங்கட்சிப் பிரமுகர்களுக்கு அவரவர் பிரதேசங்களில் வாய்ப்பான சூழ்நிலையை ஏற்படுத்திக் கொடுக்கும் நோக்குடன் செய்யப்பட்டதாகக் கூறப்படும் அறுபது பொலீஸ் அதிகாரிகளின் இடமாற்றங்களை உடன் ரத்துச் செய்யுமாறு, தமக்குக் கிடைத்துள்ள புதிய அதிகாரங்களின் கீழ் பொலீஸ் மா அதிபருக்கு உத்தரவிட்டிருக்கிறார் தேர்தல் ஆணையாளர்.

ஆனால், அந்த உத்தரவை ஏற்க பொலீஸ் மா அதிபர் தயாரில்லை என்று தகவல்கள் வெளியாகியுள்ள நிலையில், பொலீஸ் மா அதிபருக்கு எதிராக நீதிமன்ற நடவடிக்கை எடுக்க எதிர்க் கட்சிப் பிரமுகர்கள் தயாராகிவருகின்றனர்.

உயர் நீதிமன்றத்தின் கவனத்துக்கு இந்த விடயம் சமர்ப்பிக்கப்படுமானால் குறுகிய காலத்தில் நீதிமன்றப் பணிப்பு கிடைக்க வாய்ப்புகள் உண்டு. அப்படி நிகழ்ந்தால் தேர்தல் ஆணையாளரின் அதிகாரம் மேலும் உறுதிப்படுத்தப்படும்; அது தேர்தலை நீதியாகவும், நியாயமாகவும் நடத்தும் அவரது முயற்சியை மேலும் வலுப்படுத்தும்.

பொதுத்தேர்தல் மத்திய இலங்கையிலும் வடக்கிலும் எப்படி நடத்தப்படுகின்றது என்பதை அவதானிப்பதில் முழு நாடும் சர்வதேச சமூகமும் மிகுந்த கவனமாக இருக்கின்றன என்பது அனைவருக்கும் தெரிந்த விடயம்தான். எனவே வடக்குக் குறித்து கூடிய சிரத்தை எடுக்கப்பட வேண்டியது கட்டாயமானதாகும்.

வடக்கில் - இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதியில் - தேசிய அடையாள அட்டை மூலமோ அல்லது இராணுவத்தின் விசேட அடையாள அட்டை மூலமோ தாங்களது ஆளடையாளத்தை நிரூபிக்க முடியாதவர்கள், அங்கு வசிக்கவே இயலாது என்ற உண்மை அனைவருக்கும் தெரிந்ததுதான்.

எனவே குடாநாட்டில் வாக்களிக்க வரும் ஒவ்வொரு நபரையும் அடையாள அட்டை மூலம் தங்கள் அடையாளத்தை நிரூபிக்கும்படி கேட்க முடியும். இதனால் ஆள்மாறாட்டத்தைப் பெருமளவு குறைக்க முடியும். எனினும் தேர்தல் சட்ட விதிகளின் கீழ் இத்தகைய தேவைப்பாட்டை கட்டாயப்படுத்த முடியாது என்பதும் நாம் கவனிக்க வேண்டியதொன்று.

இத்தகைய - அடையாள அட்டை மூலம் அடையாளத்தை உறுதிப்படுத்தும் - விதிமுறையை நடைமுறைப்படுத்துவது குறித்துத் தாம் பரிசீலிக்கத் தயார் என்று தேர்தல் ஆணையாளர் தன்னிடம் உறுதியளித்திருப்பதாக அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் கட்சித் தலைவர் விநாயகமூர்த்தி கூறியிருக்கின்றார்.

எது, எப்படியென்றாலும் தேர்தல் வாக்களிப்பு முகவர்களை கட்சிகள் சரியாக நியமித்து, அவர்கள் விழிப்பாகத் தமது கடமையைச் செய்தால் இத்தகைய குளறுபடிகளைப் பெருமளவில் குறைக்கலாம். வாக்களிப்பு முகவர்கள் தமது கடமைகளைச் சுதந்திரமாக ஆற்றக்கூடிய சூழ்நிலையை உருவாக்கித் தருவது இதற்கு அவசியம்.

தேர்தலில் போட்டியிடும் கட்சிகளும் போட்டியிடாத சக்திகளும் ஒத்துழைத்தால்தான் இது சாத்தியமாகும். ஒத்துழைப்பார்களா?

---

ஜயவர்த்தனபுர பல்கலைக்கழக ஏற்பாட்டில்

# பனை அபிவிருத்தி தொடர்பாக கொழும்பில் செயலமர்வு

கொழும்பு,ஒக்.25

கொழும்பு ஜயவர்த்தனபுர பல்கலைக்கழகத்தின் ஏற்பாட்டில் அடுத்த மாதம் 17ஆம் திகதி சனிக்கிழமை 'பனை அபிவிருத்தியும் ஆராய்ச்சியும்' என்னும் தலைப்பிலான செயலமர்வு ஒன்று இடம்பெறவுள்ளது.

கொழும்பு 'கோல் பேஸ்' ஹோட்டலில் நடைபெறவுள்ள இந்தச் செயலமர்வில் உரை நிகழ்த்துவதற்காக யாழ்ப்பாணத்திலிருந்து நால்வருக்கு அழைப்பு விடுக்கப்பட்டிருக்கிறது.

பனை அபிவிருத்திச் சபையின் பொதுமுகாமையாளர் எஸ்.கோகுலதாசன், யாழ்.பல்கலைக்கழக முன்னாள் மருத்துவபீட பீடாதிபதி பேராசிரியர் கே.பாலசுப்பிரமணியம், தாவரவியற்றுறைத் தலைவர் திருமதி என்.ரவிமன்னா, தாவரவியற்றுறை விரிவுரையாளர் பேராசிரியர் எஸ். மோகனதாஸ் ஆகியோரே செயலமர்வுக்கு அழைக்கப்பட்டுள்ளனர்.

மிகவும் பிரமாண்டமான முறையில் நடத்தப்படவுள்ள இந்தச் செயலமர்வில் ஜெயவர்த்தனபுர பல்கலைக்கழகத்தின் பேராசிரியர்கள், விரிவுரையாளர்கள் பலரும் உரைநிகழ்த்தவுள்ளனர்.

இதேவேளை -

எதிர்வரும் 16ஆம் திகதி ஜயவர்த்தனபுர பல்கலைக்கழகத்தில் நடைபெறவுள்ள நிகழ்ச்சி ஒன்றில் சுவீடன் நாட்டுப் பேராசிரியர் எரிக் ஜான்சன் பனை வளம் சம்பந்தமான ஆய்வுக்கட்டுரை ஒன்றைச் சமர்ப்பிக்கவுள்ளார். (க-4)

## சிற்றூழியருக்கான பயிற்சி நெறி

யாழ்ப்பாணம்,ஒக்.25

வடக்கு - கிழக்கு மாகாண அரசின நிர்வாக அலகுக்குள் அடங்கும் சகல திணைக்களங்களிலும் உள்ள சிற்றூழியர்களுக்கான பயிற்சி நெறி ஒன்று யாழ்ப்பாணத்திலும், வடமராட்சியிலும் முகாமைத்துவ அபிவிருத்திப் பயிற்சித் திணைக்களத்தின ஏற்பாட்டில் நடைபெறவுள்ளது.

இப்பயிற்சி நெறியில் சகல திணைககளங்களையும் சார்ந்த சிற்றூழியர்களையும் கலந்துகொள்ளுமாறு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

இப்பயிற்சிநெறியில் தொலைபேசி, பக்ஸ் போன்றவற்றின் இயக்கங்கள் தொடர்பாகவும் பயிற்றுவிக்கப்படும்

நல்லூரில் இயங்கும் யாழ். மாவட்ட சிற்றூழியர் சங்கத்தில் மேலதிக விவரங்களைப் பெற்றுக் கொள்ளுமாறும் அறிவிக்கப்பட்டுள்ளது. (க-ரி)

---

# நாட்டு நடப்பு

### இறப்பினில் பெருமை

கண் மூடியதோ படு கிழடு
கண்டதோ வயது எண்பத்தெட்டு
உண்டிட கொடுத்தார் இல்லை
உறங்கிடப் பாய் தந்தாரில்லை
மண்டையைப் போட்டதாலே
மணமது வீசி நாற
அண்ணனும் தங்கைமாரும் அங்கு
அழுது கண்ணீரும் சிந்தி
கண்ணீரஞ்சலிகள் போட்டு
கனதியாய்ப் பறை முழக்கி
எண்ணிரண்டு பக்கம் முட்ட
எழுதினார் கல்வெட்டொன்று.

*- விகடகவி.*

---

# பருவ மழையை அடுத்து இம்முறையும் 'டெங்கு' பரவலாம் என்று அச்சம்!

## தடுப்பு நடவடிக்கைகளை தீவிரப்படுத்துமாறு அறிவுறுத்து

யாழ்ப்பாணம்,ஒக்.25

பருவமழையை அடுத்து இம்முறையும் குடாநாட்டில் டெங்குக் காய்ச்சல் பரவ வாய்ப்புள்ளதாக சுகாதாரப் பகுதியினர் பொதுமக்களை எச்சரித்திருக்கின்றனர்.

கடந்த ஆண்டு மழையை அடுத்து குடாநாட்டில் 'டெங்கு' காய்ச்சல் அறிகுறியுடன் சிலர் யாழ்.ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டிருந்தனர். அவர்களுக்கு உயிராபத்து எதுவும் நேராத போதிலும், இந்த முறையும் 'டெங்கு' காய்ச்சல் வேகமாகப் பரவ வாய்ப்புள்ளதாக எச்சரிக்கப்படுகிறது.

இப்போதிருந்தே நுளம்புப் பெருக்கத்தைக் கட்டுப்படுத்துவதன் மூலம் நுளம்புகளால் பரவும் 'டெங்கு', மலேரியா போன்ற காய்ச்சல்களைக் கட்டுப்படுத்த முடியும் என்று பொதுமக்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது. பொதுமக்கள் தமது வீடுகளில், சுற்றாடல்களில் மழை நீர் தேங்கக்கூடிய ஏதுநிலைகளைத் தவிர்க்குமாறு கேட்கப்பட்டுள்ளனர். மழைநீர் தேங்கக் கூடிய கிடங்குகள், குழிகள் போன்றவற்றை மூடியும் -

மழைநீர் தேங்கி நிற்கக் கூடிய சிரட்டை, ரயர்கள் மற்றும் தகரப் பேணிகள் போன்ற சிறு பொருள்களை அகற்றியும் - நுளம்புப் பெருக்கத்தைக் கட்டுப்படுத்த முடியும் என்று சுகாதாரப் பகுதியினர் அறிவுறுத்தியுள்ளனர்.

மருந்து தோய்ந்த நுளம்பு வலைகளைப் பயன்படுத்துவதன் மூலம் நுளம்புக் கடியில் இருந்து தம்மைப் பாதுகாத்துக்கொள்ளுமாறும் கேட்கப்பட்டுள்ளது.

நாட்டில் 'டெங்கு' காய்ச்சல் மேலும் வேகமாகப் பரவ வாய்ப்புள்ளதாக சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது. மாத்தளை மாவட்டத்தில் கடந்த சில வாரங்களில் 83 பேர் டெங்குக் காய்ச்சலால் பாதிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. (ஜ-180)

---

# சாயி சிந்தனை



## நல்லதையே செய்யுங்கள்!

தெய்வம் பிரேமை வடிவானது. இந்தப் பிரேமையை விட உயர்ந்தது வேறெதுவும் இல்லை. ஆகவே எந்த நேரமானாலும் அன்பையே அளிக்கிராறே தவிர வேறெதையும் தருவதில்லை. கடவுள் என்னைத் தண்டிக்கிறார். எனக்குப் பாடம் புகட்டுகிறார் என்றெல்லாம் கூறுவது அனைத்தும் தவறானவை.

கடவுள் எப்பொழுதும் தண்டிப்பதில்லை. அரசன்தான் தண்டிப்பானே தவிர இறைவன் எப்போதும் தண்டிப்பதில்லை. அவர் எப்போதும் அன்பாகவே இருக்கிறார். உனக்குத் தண்டனை என்பது என்ன? நீ செய்யும் செயல்களே உனக்குத் தண்டனையைப் பரிசாகத் தருகின்றன.

நமது பாவங்கள் நம்மைத் தண்டிக்கின்றனவே தவிர இறைவன் அல்ல.

நமது நற்செயல்கள் நமக்கு நல்லதைத் தருகின்றன. இறைவன் 'சாட்சி பூதமாக' விளங்குகின்றார். எல்லாவற்றிற்கும் சாட்சி அவரே. அவர் அனைத்தையும் பார்க்கிறார்.

உனது செயல்களின் விளைவுகள் நன்மையோ அன்றித் தீமையோ உனக்குத் தானே தவிர இறைவனுக்கும் அவற்றிற்கும் எந்தச் சம்பந்தமும் இல்லை. ஒரு விளக்கு எரிகிறது. அது ஒளியைத் தருகிறது. அந்த வெளிச்சத்தில் நீ திருட்டுக் கணக்கும் எழுதலாம். பகவத்கீதை, இராமாயணமும் படிக்கலாம். நீ எது செய்தாலும் பலன் உன்னுடையதுதானே தவிர விளக்குக்கும் அதற்கும் சம்பந்தமில்லை.

ஆகவே, நல்லதையே செய்யுங்கள். தீய குணங்கள் உள்ளே நுழையாமல் பார்த்துக்கொள்ளுங்கள். அன்பை வளர்த்துக்கொள்ளுங்கள்.

*(ஆதாரம்: சனாதனசாரதி - 1999 - வைகாசி)*

---

# யாழ்.கல்வியியற் கல்லூரிக்கு நாடகப் போட்டியில் முதலிடம்

யாழ்ப்பாணம்,ஒக்.25

இலங்கையில் உள்ள தேசிய கல்வியியற் கல்லூரிகளுக்கிடையே தேசிய ஒருங்கிணைப்பு நிகழ்ச்சிப் பிரிவினரால் நடத்தப்பட்ட நாடகப் போட்டியில் யாழ்.தேசிய கல்வியியற் கல்லூரியின் 'பொய்யாய் பழங்கதையாய்' என்ற நாடகத்துக்கு முதற்பரிசு கிடைத்துள்ளது.

இந்த நாடகப் போட்டி கடந்த 20ஆம், 21ஆம் திகதிகளில் மகரகம இளைஞர் சேவை மன்றத்தில் நடைபெற்றது. முதற்பரிசுடன் 10ஆயிரம் ரூபா பணப்பரிசும் இந்த நாடகத்துக்குக் கிடைத்தது.

இந்த நாடகத்தை எழுதி நெறியாள்கை செய்த கல்லூரியின் பகுதிநேர விரிவுரையாளர் க.இ.கமலநாதனுக்கு சிறந்த நாடகப் பிரதிக்கான முதற்பரிசும் கிடைத்துள்ளது.

மேலும் இந்த நாடகத்தில் பிரதான பாத்திரமேற்று நடித்த சி.சிவதர்சினி சிறந்த நடிகையாகவும், வ.சசிகுமார் சிறந்த நடிகராகவும், வ.சித்திரா சிறந்த பின்னணிப்பாடகியாகவும், க.குமாரி ஜசந்தினி சிறந்த நாட்டியக் கலைஞராகவும் மற்றும் தா.ஜீன், எஸ்.நிலூஜா, ப.கேசவன் ஆகியோர் சிறந்த இசைக் கலைஞர்களாகவும் தெரிவுசெய்யப்பட்டு பரிசில்கள் பெற்றுள்ளனர்.

இதேவேளை -

நாளையும் மறுநாள் சனிக்கிழமையும் வவுனியா தேசிய கல்வியியற் கல்லூரியில் நடைபெறவுள்ள, கல்வியியற் கல்லூரிகளுக்கு இடையேயான தமிழ் மொழித்தினப் போட்டிகளிலும் யாழ். தேசிய கல்வியியற் கல்லூரி ஆசிரிய மாணவர்கள் பங்குபற்றவுள்ளனர். (க-10)

---

## அங்குரார்ப்பணம்

ஒருங்கிணைக்கப்பட்ட கிராமிய கைத் தொழில் முயற்சி அபிவிருத்திச சங்கம் ஒன்று எதிர்வரும் 27ஆம் திகதி சனிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு வதிரியில் உள்ள வடமராட்சி மத்திய மகளிர் கல்லூரியில் அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்படவுள்ளது.

கரவெட்டி பிரதேச செயலகத்தின் ஏற்பாட்டில் இச் சங்கம் அங்குரார்ப்பணம் செய்துவைக்கப்படுகிறது. (க-173)

## பாடசாலையில் நூற்றாண்டு விழா மாடிக்கட்டடம்

வடமராட்சி,ஒக்.25

கரவெட்டி மாணிக்க வாசகர் வித்தியாலயத்தில் சுமார் 10 லட்சம் ரூபாவில் நூற்றாண்டு நிறைவு விழா மாடிக்கட்டடம் ஒன்று நிர்மாணிக்கப்பட்டுவருகிறது. இக்கட்டடத்தில் அலுவலகமும், வகுப்பறைகளும் அடங்கும்.

இதற்கான நிதி வடக்கு புனர்வாழ்வு, புனரமைப்பு அமைச்சினால் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

இக்கட்டடம் எதிர்வரும் மாசி மாதம நடைபெறும் நூற்றாண்டு விழாவின் போது திறந்து வைக்கப்படும் என அதிபர் எஸ். ராகவன் தெரிவித்தார். (க-173)

### நாளை

ஐப்பசி 09
வெள்ளிக்கிழமை
திதி : தசமி
பின்னிரவு 3.46 வரை.
நட்சத்திரம் : அவிட்டம்
முன்னிரவு 10.19 வரை.
விஜயதசமிநாள்
மகாநோன்பு
சுபநேரம் : 6.03 - 7.33
ராகுகாலம் : 10.33 - 12.03
(பழைய நேரப்படி)

### உதயவாக்கு

முட்டாள் நண்பனைவிட அறிவுள்ள பகைவன் சிறந்தவன்.


கண்ணிகள் காத்திருக்கின்றன, கவனம்!



பொருள் எடுக்கும் ஆசையில் புத்திகெட்டுப் போகாதே!
கண்ணிவெடிகள் வெடிக்கும்போது கயிறு உன்னைக் காக்குமா?

# சின்னஞ்சிறு விளம்பரம்

## தவறிவிட்டது

துர்க்காபுரம், தெல்லிப்பழையைச சேர்ந்த செல்லையா செல்வறதனின் தே.அ.அ. (இல.772533756V) தாவடிக்கும் மருதனார்மடத்துக்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் 566/1, K.K.S. வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் ஒப்படைக்கவும். (93766)

கொடிகாமத்தைச் சேர்ந்த சிதம்பரப்பிள்ளை லலிதாதேவியின் விசேட அடையாள அட்டையும் தேசிய அடையாள அட்டையும் (இல.637232630V) செல்வச்சந்நிதி கோயிலடியில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் பருத்தித்துறையில் இயங்கும் எழுதுமட்டுவாள் உப - அஞ்சலகத்தில் ஒப்படைத்துதவவும். (93791)

கோண்டாவில் மத்தி, கோண்டாவிலைச் சேர்ந்த சிவஞானசுந்தரமூர்த்தி ஞானசவுந்தரி என்பவருடைய விசேட அடையாள அட்டை (இல.0902019704) 03.10.2001 இல் கொக்குவிலுக்கும் கோண்டாவிலுக்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் மேற்படி விலாசத்தில் ஒப்படைத்து உதவவும். (93794)

## இசை வகுப்புகள்

ஓர்கன், மெலோடிக்கா, கிற்றார், புல்லாங்குழல், வயலின், வாய்ப்பாட்டு, வீணை வகுப்புகள் விஜயதசமி அன்று 2.30 - 4.30 வரை நடைபெறும். விவரங்களுக்கு: செல்வி வாசுகிரங்கன், மே/பா: து.விநாகுராசா, ஆலடி, உயரபுலம், ஆனைக்கோட்டை. (93722)

சகல மேலைத்தேய, கீழைத்தேய இசை வகுப்புகளும் விஜயதசமி அன்று 4.30 - 6.30 மணிவரை நடைபெறும். தொடர்பு: செல்வி வாசுகி ரங்கன், 62/1, வைமன் வீதி, நல்லூர், 16/2, கச்சேரி நல்லூர் வீதி. (93721)

## மிருதங்க வகுப்பு

விஜயதசமி அன்று தொடக்கம் மிருதங்க வகுப்பு நடைபெறும். விவரங்களுக்கு: கோ.விஜயகுமார், 192/1, நாவலர் வீதி, பெருமாள் கோயிலடி, யாழ்ப்பாணம். (93808)

## விற்பனைக்கு

HONDA LANCER C-70 புதியது (பதியப்படாதது) M.O.D. ஆவணங்களுடன் ரூபா 85,000/= மற்றும் HONDA C-50 ஆவணங்களுடன் ரூபா 25,000/= விற்பனைக்கு உண்டு. விவரங்களுக்கு: ஸ்கந்தராசா, கனகரத்தினம் வீதி, வட்டுக்கோட்டை. (பார்வையிட மாலை 4-6 மணி) (93744)

சுருக்குக் கேற் 12'X7', அலுமாரி, கட்டில், மேசை, சோக்கேஸ், அம்மி, உரல் உட்பட வீட்டுத் தளபாடப் பொருள்கள் என்பன விற்பனைக்கு உண்டு. 22,ஓட்டுமடம் வீதி, வண்ணார்பண்ணை. (93803)

## புறொயிலர் குஞ்சுகள் விற்பனைக்கு

பகிரா, சமிரா, பிரீமா இன புறொயிலர் குஞ்சுகள் 26.10.2001 மாலை 5 மணிக்கு விநியோகிக்கப்படும். நம்பர் I - 35/= முன்கூட்டியே பதிவுகளை மேற்கொள்ளவும். தொடர்பு: ஆனைக்கோட்டை சந்தி. T.P.3529, 2867. (93792)

## இறைச்சிக்கோழி தேவை

புறொயிலர் இறைச்சிக் கோழிகள தேவை. தொடர்பு: க.தனபாலசிங்கம், 19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச் சந்தையடி, நல்லூர். (93805)

## வாடகைக்கு

மிட்டாஸ் கடைச் சந்திக்கு அருகில் சகல வசதிகளும் கொண்ட இரண்டு கடைகள் வாடகைக்குண்டு. தொடர்பு: க.கோபால், 127, ஜும்மா பள்ளி லேன், யாழ்ப்பாணம். (93770)

## கோப்பாய் தரவை வயல்களில் வெள்ளம்

கோப்பாய்,ஒக்.25

கோப்பாய்த் தரவையை அண்டிய வயற்பகுதியில் வெள்ளம் தேங்கி நிற்கிறது. இதனால் நெல்நாற்றுகள் அழுகி அழிந்து விடும் அபாயநிலை ஏற்பட்டுள்ளதாக விவசாயிகள் கவலை தெரிவித்துள்ளனர்.

இதேவேளை -

கோப்பாய், நீர்வேலிப் பகுதிகளில் உள்ள தாழ்ந்த நிலப் பகுதிகளில் தொடர்ந்து வெள்ளம் தேங்கி நிற்கிறது. அப்பகுதிகளில் சில வீதிகளும் சேதமடைந்துள்ளன.

(க-17-7-2)

---

யாழ்.மாவட்ட சிக்கன கடன் வழங்கு கூட்டுறவுச் சங்கங்களின்

## சமாச விசேட பொதுக் கூட்டம்

**31-10-2001**

மேற்படி கூட்டம் 2001.10.31 ஆம் திகதி புதன்கிழமை முற்பகல் 9.30 மணிக்கு (புதிய நேரம்) யாழ். சன்மார்க்க மகாவித்தியாலய (பெருமாள் கோயில் முன்பாக) மண்டபத்தில் சமாசத் தலைவர் திரு. ச. முருகனேசன் அவர்களின் தலைமையில் நடைபெறவுள்ளது. கூட்ட நிகழ்ச்சி நிரலும், வரவு - செலவுத் திட்டம் 2002, அதிகாரக் கடிதமும் அங்கத்துவ சங்கங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. தற்போது எம்முடன் தொடர்பு இல்லாத அங்கத்துவச் சங்கங்கள் இவற்றை சமாசக் காரியாலயத்தில் பெற்றுக் கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கின்றேன். கணக்காய்வறிக்கை, வரவு - செலவுத் திட்டத்தினை விரிவாகப் பார்வையிட விரும்பும் சங்கங்கள் அலுவலக நேரங்களில் (காலை 8.30 - 4.30) வந்து பார்வையிட்டு ஒத்துழைக்குமாறு அன்பாகக் கேட்டுக் கொள்கின்றேன்.

*பதில் மாவட்டச் செயலாளர்,*
*யாழ். மாவட்ட சி. க. கூ. சங்க சமாசம்.*

*637, கே.கே.எஸ். வீதி,*
*யாழ்ப்பாணம்.*

(C/18834)

---

## இரண்டாவது ஆண்டு நினைவலைகள்



| மலர்வு | உதிர்வு |
|---|---|
| 1919 . 10 . 04 | 1999 . 10 . 18 |

### திருமதி இலட்சுமி பொன்னு

திதி: 25.10.2001

பாசத்தின் இருப்பிடமாய்
பண்பின் உறைவிடமாய்
நேசமுடன் எமை வளர்த்து
தேசம் புகழ் வைத்த
அன்புத் தெய்வத்திற்கு எமது அஞ்சலிகள்.

*உங்கள் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கும்:*
பிள்ளைகள்,
மருமக்கள்,பேரப்பிள்ளைகள்,
பூட்டப்பிள்ளைகள்.

*கே.கே. எஸ்.வீதி,*
*கோண்டாவில் மேற்கு.*

(93802)

---

## நிரஞ்சனாஸ் தியேட்டர் திறப்பு விழா

அன்புடையீர்!

நாளை மறுதினம் (27.10.2001) சனிக்கிழமை 11.15 மணிக்கும் 12.00 மணிக்குமிடையில் எம்மால் வட்டுக்கோட்டைத் தொகுதியில் 18 வருடங்களின் பின்பு மீண்டும் புதிதாக

**நிரஞ்சனாஸ் தியேட்டர்** வைபவரீதியாக

வலி.மேற்கு பிரதேச சபைத் தலைவரும் வட்டுக்கோட்டைத் தொகுதி ஈ.பி.டி.பி. அமைப்பாளருமான

**திரு.ந. திரிலோகநாதன்** அவர்களால்

ஆரம்பித்து வைக்கப்படவுள்ளதால் அந்தருணம் எமது உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் தங்கள் குடும்பசகிதம் வருகைதந்து சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

அன்றைய தினம்

**ராம்கி, விவேக், ரம்யாகிருஷ்ணன்** நடித்த

**பாளையத்து அம்மன்**

திரைப்படம் காண்பிக்கப்படும்.

*இல. 206, பொன்னாலை வீதி,*
*சங்கானை.*

தங்கள் நல்வரவை நாடும்:
**திரு.திருமதி A.N.பரமநாதன்** J.P.

(C/18835)

---

## முதலாவது பிறந்தநாள் வாழ்த்து

## HAPPY BIRTHDAY

## 25-10-2001

## செல்வி ஷயிந்தா ராஜரட்ணம்



புலோலி தெற்கைச் சேர்ந்த
**ராஜரட்ணம் - தனலட்சுமி** தம்பதியினரின் செல்வப் புதல்வி

### ஷயிந்தா (ஷயி குட்டி)

தனது முதலாவது பிறந்தநாளை இன்று (25-10-2001) வியாழக்கிழமை ஹற்றனில் உள்ள தனது இல்லத்தில் வெகுவிமரிசையாகக் கொண்டாடுகிறார். ஷயிந்தாவை அன்பு அப்பா - அம்மா, அப்பப்பா, அப்பம்மா, அம்மம்மா, சின்னம்மாமார், பெரியப்பாமார், பெரியம்மாமார், சித்தப்பாமார், சித்திமார், மாமாமார், மாமிமார், மச்சான்மார், மச்சாள்மார், அண்ணன்மார், அக்காமார், சுற்றத்தார், அயலவர்கள் அனைவரும் சின்னத்தாய் பிள்ளையார் அருளாலும், மூச்சம்பலம் சிவனருளாலும் பல்கலையும் பெற்று சீரும் சிறப்புடனும் பல்லாண்டு காலம் வாழ்கவென வாழ்த்துகிறார்கள்.

தகவல்:
**ப.பரராஜசிங்கம்** (பெரியப்பா)

*புலோலி தெற்கு,*
*புலோலி.*

(93793)

---

நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனத்தில்

## புதிய வகுப்புகள் ஆரம்பம்

நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனத்தில் நாளை (26-10-2001) வெள்ளிக்கிழமை இசை வகுப்புகள் ஆரம்பமாகின்றன.

காலை 7 மணிக்கு - **பரதநாட்டிய வகுப்பு**
(ஆசிரியர் திருமதி ஸ்ரீமோகனா பாலசுப்ரமணியம்)

மாலை 3 மணிக்கு - **பண்ணிசை வகுப்பு**
(ஆசிரியர் திரு. வி. சிவஞானசேகரம்)

மாலை 3.30 மணிக்கு - **கர்நாடக சங்கீத வகுப்பு**
(ஆசிரியர் திரு. வி. சிவஞானசேகரம்)

மாலை 4 மணிக்கு - **மிருதங்க வகுப்பு**
(ஆசிரியர் செல்வன் கஜன்)

மாலை 4.30 மணிக்கு - **வயலின் இசை வகுப்பு**
(ஆசிரியர் திருமதி ஸ்ரீகாந்)

*கலந்துகொள்பவர்களை அன்புடன் அழைக்கின்றோம்.*

*ஆதீன முதல்வரின் அருளாணைப்படி*
*ஆதீன மேலாளர்.*

(93788)

---

உ
சிவமயம்

ஏழாலை வசந்தபுரம் அருள்மிகு
வசந்த நாகபூஷணி அம்பாள் தேவஸ்தானம்

## புதிய சித்திரத்தேர் வெள்ளக்கால் நாட்டுவிழா

*காலம்:* நாளை (26.10.2001) வெள்ளிக்கிழமை
நண்பகல் 12.00 மணி

*நவகோணத்தில் அமையும் இப்புதிய சித்திரத்தேரை நிர்மாணிப்பவர்கள்:*

"கலாபூஷணம்" ஸ்தபதி **ஆ.ஜீவரட்ணம் ஆச்சாரியார்**
அவர்களின் புதல்வன்
"சிற்பப்பிரகாசம்" **திரு.ஜீவரட்ணம் ஜெயப்பிரகாசன்**
மற்றும் உறவினர்கள்.

ஆறுமுகசிற்பாலயம்
*திருநெல்வேலி மேற்கு, யாழ்ப்பாணம்.*

*வெள்ளக்கால் நாட்டும்:*


அளவையூர் அருட்கவி **சீ.விநாசித்தம்பி ஐயா** அவர்கள் தேவஸ்தானம் சார்பில் அருளமுதச் சொல்வாரி **சிவத்திரு. வ. குமாரசாமி ஐயா** அவர்களால் பொன்னாடை போர்த்துக் கௌரவிக்கப்படுவார்.

இவ்வைபவத்தில் அம்பிகை அடியார்கள் அனைவரும் கலந்து அன்னையின் திருவருள் பெறுவீர்களாக.

(93787) - **தேவஸ்தானம்.**

---

## துயர் பகிர்கின்றோம்



எமது மண்ணின் மைந்தனும்,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழக
கலைப்பீடாதிபதியுமான பேராசிரியர்

### செல்லத்துரை பாலச்சந்திரன்

அவர்களின் மறைவினால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு, அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**தலைவர், பணிப்பாளர்கள், பணியாளர்கள்,**
**வேலணை ப.நோ.கூ. சங்கம், வேலணை.**

(93800)

### ஐ.தே.கவில் இணைந்துள்ள

# முன்னாள் எம்.பியைத் தாக்கினார் பழைய பிரதி அமைச்சர் மேர்வின்!

கொழும்பு,ஒக்.25

பொதுமக்கள் ஐக்கிய முன்னணியைச் சேர்ந்த முன்னாள் பிரதி அமைச்சர் மேர்வின் டி சில்வா, பொ.ஐ. முன்னணியில் இருந்து அண்மையில் ஐ.தே. கட்சிக்கு மாறிய முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரான ஜெயசுந்தர விஜேக்கோனை அச்சுறுத்தித் தாக்கியதாகக் கூறப்படுகின்றது.

அநுராதபுரம் ஸ்ரீமகாபோதி வளவுக்குள் இடம்பெற்ற இந்தச் சம்பவம் குறித்து அநுராதபுரம் பொலீஸில் முறைப்பாடு செய்யப்பட்டிருக்கின்றது.

தனது குடும்பத்தவர்களுடன் இந்தத் தலததுக்குத் தாம் யாத்திரையாக வந்திருந்தபோது மேர்வின் டி சில்வா தம்மை வம்புக்கு இழுத்து பலதடவைகள் தாக்கியதாக விஜேக்கோன் பொலீஸ் முறைப்பாட்டில் தெரிவித்துள்ளார். தமது மெய்ப்பாதுகாவலர் தம்மை மீட்டுக் காப்பாற்றியதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

விஜேக்கோனுக்கு எதிராக மேர்வின் டி சில்வாவும் பொலீஸில் முறைப்பாடு செய்துள்ளார்.

ஓரிரு தினங்களுக்கு முன் 'திவயின' பத்திரிகை அலுவலகத்துக்குள் பலவந்தமாகப் புகுந்து அப்பத்திரிகையின் ஆசிரியர் பீடத்தில் கலாட்டா புரிந்ததாக மேர்வின் டி சில்வாமீது குற்றம சுமத்தப்பட்டிருப்பது தெரிந்ததே.

(உ)

### வல்லிபுரக்குறிச்சி, துன்னாலை வடக்கில்

# வயல்களைச் சுற்றியடைக்க முட்கம்பிச் சுருள் விநியோகம்

தென்மராட்சி,ஒக்.25

வடமராட்சிப் பிரதேசத்தில் உள்ள வல்லிபுரக்குறிச்சி, துன்னாலை வடக்கு, புலோலி தெற்கு ஆகிய பகுதிகளில் கட்டாக்காலி கால்நடைகளால் அழிவுகள் ஏற்படக்கூடிய தாகக் கருதப்படும் வயல்களைச் சுற்றி அடைப்பதற்குரிய முட்கம்பிச் சுருள்கள் கடந்த செவ்வாய்க்கிழமை அந்தந்தப் பகுதி விவசாய சம்மேளனங்களிடம் வழங்கப்பட்டன.

வடக்கு புனர்வாழ்வு, புனரமைப்பு அதிகாரசபையினால் புலோலி கமநல சேவைகள் நிலையத்துக்கு வழங்கப்பட்ட 28 அந்தர் முட்கம்பிச் சுருள்களை பருத்தித்துறை பிரதேச சபைத் தலைவர் ஐ. ஸ்ரீரங்கேஸ்வரன அந்தந்த விவசாய சம்மேளனங்களின் தலைவர்களிடம் வழங்கினார்.

நிகழ்வில் பருத்தித்துறை விவசாய பெரும்பாக அலுவலர், விவசாயப் போதனாசிரியர், அந்தந்தப் பகுதி கிராம அலுவலர் உட்படப் பலர் கலந்துகொண்டனர்.

வருடாவருடம் இப்பகுதி வயல்களில் மேற்கொள்ளப்படும் பெரும்போக நெற்செய்கை கட்டாக்காலிக் கால்நடைகளால் அழிக்கப்படுவதாக நெற்செய்கையாளர்கள் முறையிட்டதையடுத்து இம்முறை இந்த வயல்களைச் சுற்றி முட்கம்பி வேலிகள் அமைக்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

(க-117)

### பங்கீட்டு அட்டை மோசடிச் சம்பவம்:

# கிராம அலுவலர் மூவரும் மீண்டும் நல்லூர்ப் பிரிவுக்கு இடமாற்றம்

யாழ்ப்பாணம்,ஒக்.25

நல்லூர் பிரதேச செயலர் பிரிவில் பொதுமக்களுக்கு வழங்கப்பட வேண்டிய நிவாரணப் பங்கீட்டு அட்டைகளில் இடம்பெற்றதாகக் கூறப்படும் முறைகேடுகளை அடுத்து, பணியில் இருந்து இடைநிறுத்தப்பட்டுப் பின்னர் வேறு பிரதேச செயலக பிரிவுகளுக்கு இடமாற்றம் வழங்கப்பட்ட மூன்று கிராம அலுவலகர்களும் மீண்டும் நல்லூர் பிரதேச செயலகப் பிரிவுக்கு இடமாற்றப்பட்டிருக்கின்றனர்.

நிவாரணப் பங்கீட்டு அட்டைகளில் மோசடி செய்யப்பட்டதாகக் கூறப்பட்ட சம்பவம் தொடர்பாக நல்லூர் பிரதேச செயலக மட்டத்திலும் பின்னர் மாவட்ட செயலக மட்டத்திலும் விசாரணைகள் நடைபெற்றுவந்தன. இந்த விசாரணைகளின் பின்னர் சம்பந்தப்பட்ட கிராம அலுவலர்கள் மூவரும் மீண்டும் நல்லூர் பிரதேச செயலகப் பிரிவுக்கு இடமாற்றம் செய்யப்பட்டிருக்கின்றனர். (ஐ-180)

### மணிக்கோபுரம்

சுழிபுரம்,ஒக்.25

சுழிபுரம் மேற்கு ஸ்ரீ கதிர் வேலாயுத சுவாமி கோயிலுக்கு புதிய மணிக்கோபுரம் கட்டும் பணிகள் ஆரம்பமாகி நடைபெற்று வருகின்றன.

இந்த ஆலயத்தில் புதிதாக பிள்ளையார் கோயில், வைரவர் கோயில், வசந்த மண்டபம், மாபிள் பதிக்கப்பட்ட பலி பீடங்கள் யாவும் கட்டப்பட்டுள்ளன. (க-28)

### லண்டனில் பட்டமளித்து கௌரவம்

சுன்னாகம் கதிரமலை சிவன் தேவஸ்தான பிரதம சிவாசாரியார் பிரம்மஸ்ரீ நா.சர்வேஸ்வரக்குருக்களுக்கு லண்டன் ஈலிங்கன் நகர் ஸ்ரீகனக துர்க்கா அம்மன் ஆலய அறங்காவல நிர்வாக சபையினரும் நிர்வாக சபையினரும் இணைந்து " சதமஹோற்சவ கிரியா சிரோன்மணி" என்ற பட்டம் வழங்கிக் கௌரவித்துள்ளனர்.

ஈலிங்கன் நகரில் உறையும் ஸ்ரீகனக துர்க்கா அம்மன் ஆலய வருடாந்தப் பெருவிழா அண்மையில் இடம்பெற்றது. இப்பெருவிழாவில் முதன் முதலாக கொடிமரம் ஸ்தாபிக்கப்பட்டு தனது குருத்தவப் பணியில் நூறாவது மகோற்சவ மகா வேத சிவாகம முறைப்படி சிறப்பாக நடத்திமுடித்த சர்வேஸ்வரக் குருக்களுக்கு மகோற்சவ இறுதிநாளன்று ஆலய நிர்வாக சபையினர் பட்டமளித்துக் கௌரவித்தனர்.

லண்டன் மாநகரில் உள்ள இந்து ஆலயங்களில் முதன்முதலாக ஈலிங்கன் ஸ்ரீகனக துர்க்கா அம்மன் ஆலயத்திலேயே புதிய தேர் அமைக்கப்பட்டு, தேர்த் திருவிழாவும் இடம்பெற்றுள்ளது. (க-152)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



2001ஆம் ஆண்டு 5ஆம் தர புலமைப் பரிசில் பரீட்சையில் 142 புள்ளிகளைப் பெற்று சித்தியடைந்த

**செல்வன்**

**சோதிநாதன் விஷ்ணுச்சந்தர்**

(யா/தம்பசிட்டி மெ.மி.த.க. பாடசாலை)

அவரைப் பாராட்டி வாழ்த்துவதோடு, அவர், கல்வியில் மேன்மேலும் உயர மாயக்கை விநாயகனை வேண்டி நிற்பதுடன், அவரது வெறறிக்கு வழிகோலிய பாடசாலை அதிபர், ஆசிரியர்கள் மேலும் செல்வி சகுந்தலா ஆசிரியை, திரு.சிவசுப்பிரமணியம் ஆசிரியர் ஆகியோருக்கும் நன்றி கூறுகின்றோம்.

*வத்தனை,* பெற்றோர், உற்றார், உறவினர்.
*புலோலி மேற்கு, பருத்தித்துறை.* (93812)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்

*சங்குவேலி வடக்கு ஸ்ரீ முத்துமாரி அம்பாள் தேவஸ்தானம்*

மேற்படி ஆலய புனரமைப்புக்காக ரூபா ஒரு லட்சம் வழங்கிய,



மாண்புமிகு கௌரவ அமைச்சர்

**K.N.டக்ளஸ் தேவானந்தா**

அவர்களையும்



வலிகாமம் தெற்கு
பிரதேச சபைத் தலைவர்
திரு. **K.கமலசேகரன்**
அவர்களையும்

*பாராட்டி வாழ்த்துகின்றோம்.*

பரிபாலன சபை,
(93804) முத்துமாரி அம்பாள், தேவஸ்தானம்.

அம்பாள் துணை

**கல்வியங்காடு**

அருள்மிகு

இலங்கைநாயகி மனோன்மணி அம்பாள் கோயில்

## கேதார கௌரி காப்பு

**திருகோணமலை ஸ்ரீ பத்திரகாளி கோயில் கேதார கௌரி காப்பு அடியார்களின் வசதிகருதி இம்முறையும் வழமைபோல் மேற்படி ஆலயத்தில் வழங்கப்படும். கேதார கௌரிகாப்பு பெறவிரும்பும் அடியார்கள் முன்கூட்டியே தங்கள் பெயர்களைப் பதிவு செய்யும்படி கேட்டுக்கொள்கிறோம்.**

**ஆரம்பம்:-** நாளை (26-10-2001) வெள்ளிக்கிழமை.

எதிர்வரும் 14.11.2001 புதன்கிழமை காலை 10.00 மணி பூசையைத் தொடர்ந்து கௌரிக்காப்பு நூல் வழங்கப்படும்.

பொ. கிருஷ்ணமூர்த்திசர்மா
*ஆலயநிர்வாகம்.* (93795)

சு.பாலசுப்பிரமணிய ஐயர்
*ஆலய உரிமையாளரும்*
*ஆதீனகர்த்தாவும்.*

## வாழ்த்துகின்றோம்

**திருகோணமலை இராஜவரோதயம் வீதியைச் சேர்ந்த**

**ரஞ்சன் - அனுசூயா** தம்பதியினரின் சிரேஷ்ட புதல்வி

## செல்வி ஆரணி

அவர்கள் 5ஆம் ஆண்டுப் புலமைப்பரிசில் பரீட்சையில் 163 புள்ளிகளைப் பெற்றுச் சித்தியடைந்தமைக்காக வாழ்த்துகின்றோம்.

We wish our little lady many more similar successes in the coming years and very many thanks to the revered sisters of Holy Family Convent, Trincomalee under whose guidance and guardianship she was trained.

*மாமன்மார்:* இ.உமாசங்கர், இ.சிவசங்கர், இ.உதயசங்கர் (வதிரிவாசன்), இ.பிரபுசங்கர்.
*மாமிமார்:* உ.கமலோஜினி, சி.மீரா, பி.அனுவா
*மைத்துனர்மார்:* உ.ஆரூரன். உ.ஆரபி, உ.ஆரணன். சி.நிரஜன், சி.நிஷாந்தன். (93817)



## கண்ணீர்க் காணிக்கை

எமது கலைப்பீடாதிபதி பேராசிரியர்

## எஸ்.பாலச்சந்திரன்

அவர்களின் மறைவையிட்டு எங்கள் கண்ணீர அஞ்சலியைச் செலுத்துகின்றோம். அன்னாரின் ஆத்ம சாந்திக்குப் பிரார்த்திக்கும் அதேவேளை அவர் பிரிவால் துயருறும் அவரது குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

**தலைவர்கள், விரிவுரையாளர்கள், துறைசார் ஊழியர்கள்,**
(93814) *இராமநாதன் நுண்கலைப்பீடம், மருதனார்மடம்.*

## காரைநகர் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம் (வ-து) காரைநகர்.

### கிளைக்குழுக்களைத் தெரிவு செய்வதற்கான கிளைப்பொதுக்கூட்டம் 31.10.2001 புதன்கிழமை

கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளரும் பதிவாளரும் (வ.கி.மா.) அவர்களினால் ஆக்கப்பட்டு 1998.05.19ஆம் திகதிய 1028/6 இலக்கம் கொண்ட அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டதுமான "வடக்கு - கிழக்கு மாகாண எல்லைக்குட்பட்ட பகுதியில் இயங்கிவரும் வரையறுக்கப்பட்ட பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்களின் கிளைக்குழுக்களைத் தெரிவு செய்வதற்கான விதிகள" இற்கு அமையவும் மேற்படி சங்கத்தின் துணைவிதி 23ற்கு அமையவும் சங்கத்தின் சகல கிளைகளிலும் கிளைக்குழுத் தெரிவுக்கான கிளைப்பொதுச் சபைக் கூட்டங்கள் பின்வரும் கால அட்டவணைப்படி நடைபெறும் என்பதை சகல உறுப்பினர்களுக்கும், இத்தால் அறிவிக்கப்படுகின்றது. ஆகவே தயவுசெய்து கிளைப் பொதுச்சபைக் கூட்டங்களுக்குச் சமுகம் கொடுக்கத் தகுதிபெற்ற உறுப்பினர்கள் யாவரும் அந்தந்தக் கிளையில் பொதுச்சபைக் கூட்டங்களுக்குத் தவறாது சமுகமளிக்கும்படி கேட்டுக்கொள்கின்றேன்.

*கிளைப் பொதுச்சபைக் கூட்ட ஆரம்பம்:* 2001.10.31 புதன்கிழமை காலை 10.00 மணி

**கூட்டம் நடைபெறும் இடம், தவிசாளர் பெயர் விவரம்:**

| தொ. இல. | கிளை இல. | கிளையின் பெயர் | தவிசாளர் பெயர் | கிளைப்பொதுச்சபைக் கூட்டம் நடைபெறும் இடம் |
|---|---|---|---|---|
| 01 | 01 | தோப்பகம் | திரு. க. குகதாசன் | |
| 02 | 02 | விளானை | திரு. எம். எஸ். சண்முகநாதன் | யா/சுந்தரமூர்த்திநாயனார் வித்தியாலயம், |
| 03 | 10 | ஊரி | திரு. க. சின்னராசா | காரைநகர். |
| 04 | 11 | பாலாவோடை | திரு. ஐ. நாகேஸ்வரன் | |
| 05 | 03 | களபூமி | திரு. எஸ். திருச்செல்வம் | - கிளை 3 கட்டடம், களபூமி. |
| 06 | 04 | கணேசன் | திரு. பொ. தட்சணாமூர்த்தி | யா/கலாநிதி ஆ. தியாகராசா |
| 07 | 13 | நீலிப்பந்தனை | திரு. சு. கணேசு | மத்திய மகாவித்தியாலயம், காரைநகர். |
| 08 | 05 | காரைநகர் | திரு. வி. கைலைநாதன் | - சங்கப் பணிமனை |
| 09 | 06 | ஆலடி | திரு. வி. கே. அருந்தவநாதன் | - கிளை இல. 06 கட்டடம், ஆலடி. |
| 10 | 07 | சிவகாமி | திரு. ரி. என். ராஜா | - கிளை இல. 07 கட்டடம், சிவகாமி. |
| 11 | 08 | கோவளம் | திரு. என். தவநாதன் | - கிராமமுன்னேற்றச் சங்கக் கட்டடம், கோவளம். |
| 12 | 09 | வியாவில் | திரு. கே. குமரகுருலிங்கம் | - யா/வியாவில் சைவவித்தியாலயம். |
| 13 | 12 | வாரிவளவு | திரு. பொ. மகேஸ்வரன் | - கிளைக்கட்டடம், வாரிவளவு. |

முக்கிய குறிப்பு:

இடப்பெயர்வு காரணமாக உறுப்பினர்களின் தற்போதைய தனிப்பட்ட முகவரியினை அறிய முடியாமையால், ஒவ்வொரு தகைமைபெற்ற உறுப்பினர்களுக்கும் தனித்தனி அறிவித்தல் அனுப்பிவைக்க முடியவில்லை. ஆகவே இந்த அறிவித்தலை ஒவ்வொரு உறுப்பினர்களுக்கும் தனித்தனியாக வழங்கப்பட்ட அறிவித்தலாகக் கொள்ளும்படி தயவுடன் கேட்டுக்கொள்கின்றேன். கிளைக்குழு உறுப்பினர் தெரிவு தொடர்பான விவரமான அறிவுறுத்தல்கள தற்போது செயற்படும் சங்கக் கிளைகளிலும், சங்கத் தலைமை அலுவலகத்திலும் காட்சிப்படுத்தப்பட்டுள்ளது.

கூட்டுறவு அலுவலகம்,
*857, கே.கே.எஸ்.வீதி,*
*யாழ்ப்பாணம்.*
25.10.2001.

செ.கு.சண்முகநாதன்
கூ.அ.உ. ஆணையாளர்.
(C-18836)

## சில்லாலைப் பகுதியில் இயங்கும்

# கள்ளுத் தவறணையை இடம்மாற்றக் கோரிக்கை

சண்டிலிப்பாய்,ஒக்.25

சில்லாலையில் . இயங்கிவரும் கள்ளுத் தவறணையை அப்பகுதி மக்களின் நலன்கருதி வேறு இடத்திற்கு விரைவில் இடம்மாற்றம் செய்யுமாறு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

வணக்கஸ்தலங்களுக்கு அண்மையில் இருப்பதாலும் -

சுற்றாடல் சுகாதாரம் பாதிக்கப்பட்டு வருவதாலும் -

கள் குடிப்பவர்களினால் வழிப்போக்கர்களுக்கும், அயலில் உள்ள மக்களுக்கும் பெரும் உவத்திரவம், தொல்லைகள் என்பன ஏற்படுவதாலும் இக்கள்ளுத் தவறணையை கடந்த 1992ஆம் ஆண்டுக்கு முன்னர் இயங்கி வந்த இடமான சில்லாலை டச்சு வீதிக்குச் சமீபமாகவுள்ள இடத்திற்கு இடம்மாற்றம் செயயுமாறு அப்பகுதி மக்கள் கையொப்பமிட்டு சண்டிலிப்பாய்ப் பிரதேச செயலருக்கு கடந்தவாரம் அனுப்பிவைத்துள்ள மகஜர் ஒன்றில் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

இம் மகஜரின் பிரதிகள் வலி. தென்மேற்கு பிரதேச சபைத் தலைவர், பண்டத்தரிப்பு பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கத தலைவர், சில்லாலை வடக்கு கிராம அலுவலர் ஆகியோருக்கும் மற்றும் பல நிறுவனங்களுக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. (ஐ-135)


வாழ்க்கையாளர்களுக்கு ஒரு நற்செய்தி!
தீபாவளியை முன்னிட்டு
மாபெரும் மலிவு விற்பனை
இன்றே நாடுங்கள்!
லைடன் புடவை நிலையம்
24.10.2001 முதல் 14.11.2001 வரையும் சகலவிதமான புடவை களுக்கும் விசேட கழிவு வழங்கப்படும் என்பதை வாடிக்கை யாளர்களுக்கு மகிழ்ச்சியுடன் அறியத்தருகின்றோம்.
லைடன் புடவை நிலையம்,
410, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.
T.P. - 2381 (C/18832)


## 4ஆம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 22 - 01 - 1939



மறைவு 10 - 10 - 1997

திருமதி

### ஜெகதீஸ்வரி நடராசா B.Sc.

*(ஓய்வுபெற்ற ஆசிரியை, மத்திய மகாவித்தியாலயம் - வசாவிளான்)*

**திதி: மகாநவமி 25.10.2001**

**அன்போடும் பண்போடும் வாழ்ந்து மறைந்த அன்னாரின் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கும்:**

*சேச் லேன், உரும்பிராய் கிழக்கு, உரும்பிராய்.*

கணவர்:-லயன் இ.நடராசா (ஓய்வுபெற்ற நிறைவேற்று பொறியியலாளர் - வீதி அபிவிருத்தி அதிகாரசபை - யாழ்ப்பாணம்.)

(93749)

## 17ஆவது ஆண்டு நினைவு நாள்

அன்னையின் மடியில் 11 - 04 - 1972



ஆண்டவன் அணைப்பில் 25 - 10 - 1984

### செல்வி நிமாலினி வீரசிங்கம் (பாப்பா)

*எங்கள் அன்புத் தெய்வமே! உன்னை இழந்து*
*பதினேழு ஆண்டுகள் மறைந்ததம்மா!*
*எங்கள் கொடியில் பூத்த முதல் பூவை மறப்போமா?*
*பத்து மாதம் கருவினில் சுமந்தேன் பன்னிரண்டு*
*வருடங்கள் மடிமீதும் தோள்மீதும் தாங்கினோம்*
*மீண்டும் நீ எங்களிடம் செல்வப் பேர்த்தியாக,*
*பாசமிகு மருமகளாக, ஆசைப் பூட்டியாக*
*வரவேண்டும் என்று உன் நினைவலைகளுடன் இருக்கும்!*

என்றும் நீங்காத நினைவுடன்:
அப்பா - அம்மா *(கனடா)*
பாசமிகு உடன்பிறப்புகள்:
வீ.லெனின்ராஜா *(கனடா)*,
திருமதி பாமினி விநாயகமூர்த்தி *(பிரான்ஸ்)*,
வீ.தீபராஜா *(கனடா)*, வீ.தயாழினி *(கனடா)*.

*34/1, இராமநாதன் வீதி, யாழ்ப்பாணம்.*

(93753)

## கௌரவிப்பு

யாழ்ப்பாணம்,ஒக்.25

யாழ்பல்கலைக்கழக நூலக பதவி நிலை உயர் உத்தியோகத்தரான மு.சின்னராசா அண்மையில் நூலக சேவையில் 25 வருடங்களைப் பூர்த்தி செயதமையையிட்டு பாராட்டிக் கௌரவிக்கப்பட்டார்.

யாழ்.பல்கலைக்கழக நூலக நலன்புரிச் சங்கத்தால் ஏற்பாடு செய்யப்பட்ட இந்தப் பாராட்டு விழாவில் நூலகர் திருமதி ஆர்.பரராஜசிங்கம் உட்படப் பலர் உரைநிகழ்த்தினர். (ம-4)

## கருத்தரங்கு

யாழ்ப்பாணம்,ஒக்.25

யாழ்ப்பாணம் ஆனைப்பந்தி மெதடிஸ்த மிஷன் வித்தியாலயத்தில் எதிர்வரும் சனிக்கிழமை பிற்பகல் 12.30 மணிக்கு அதிபர் எஸ்.சோமேஸ்வரபிள்ளை தலைமையில் "மூலிகைகளும் சுகவாழ்வும்" என்னும் சுகாதாரக் கருத்தரங்கு ஒன்று நடைபெறவுள்ளது.

இக்கருத்தரங்கில் டாக்டர் வெற்றிவேல் சக்திவேல் சிறப்புரையாற்றுவார். (க-ரி)

## கலைநிலா அரங்க நிகழ்வு

யாழ்ப்பாணம்,ஒக்.25

திருமறைக் கலாமன்றத்தின் மாதாந்தக் கலைநிலா அரங்க நிகழ்வுகள் எதிர்வரும் 28ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை மாலை 6.30 மணிக்கு மன்ற அரங்கில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வில் வயலின் சோலோ, "எங்கே போகிறோம்" எனனும் தலைப்பிலான கவியரங்கம் ஆகிய நிகழ்வுகளும் இடம்பெறவுள்ளன.

சிறப்பு நிகழ்ச்சியாக இளவாலை புனித ஹென்றியரசர் கல்லூரி மாணவர்கள் வழங்கும் 'நியாயத்தான்' என்ற சிந்து நடைக் கூத்தும் நடைபெறவுள்ளது. (க-4)

## வாக்காளர் எண்ணிக்கை

கொழும்பு,ஒக்.25

எதர்வரும் டிசெம்பர் 5ஆம் திகதி நடைபெறவுள்ள பொதுத்தேர்தலில் ஒரு கோடியே 24 லட்சத்து 28 ஆயிரத்து 762 பேர் வாக்களிக்கத் தகுதி பெற்றுள்ளனர்.

கொழும்பு மாவட்டமே அதிக வாக்காளர்களைக் கொண்டுள்ளது. அங்கு 14 லட்சத்து 40 ஆயிரத்து 682 பேர் வாக்களிக்கத் தகுதிபெற்றுள்ளனர்.

எதிர்வரும் 27ஆம் திகதி வேட்பு மனுக்களை ஏற்கும் நடவடிக்கைகள முடிவடைகின்றன. அங்கீகரிக்கப்பட்ட 49 அரசியல் கட்சிகளில் 25 அரசியல் கட்சிகள் போட்டியிடக் கூடும் என எதிர்பார்க்கப்படுகிறது. (ஐ)

## முதியோரை கௌரவிக்க ஏற்பாடு

சண்டிலிப்பாய்,ஒக்.25

வலி.மேற்கு பிரதேச செயலர் பணிமனையில் முதியோர் தினத்தை விரைவில் கொண்டாடுவதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுவருகின்றன.

இப் பிரிவிலுள்ள கிராம அலுவலர் பிரிவு ரீதியாக முதியவர்கள் தெரிவுசெய்யப்பட்டு, அவர்கள் கௌரவிக்கபடவுள்ளதாக பிரதேச செயலக வட்டாரங்கள் தெரிவித்தன. (ஐ-135)

## மணலாறில் சிப்பாய் பலி!

வவுனியா,ஒக்.25

மணலாறு கொக்குத்தொடுவாய் இராணுவ முகாம்மீது நேற்றுமுன்தினம் காலை விடுதலைப் புலிகள் மேற்கொண்ட ஷெல் தாக்குதலில் சிப்பாய் ஒருவர் கொல்லப்பட்டார் என்றும் மேலும் 3பேர் காயமடைந்தனர் என்றும் விசேட ஊடகத் தகவல் நிலையம்,அறிவித்துள்ளது. (க-4)

## கிளைமோர் குண்டு புலிகளால் மீட்பு!

மட்டக்களப்பு,ஒக்.25

மட்டக்களப்பு மாவட்டத்தில் இராணுவக் கட்டுப்பாடற்ற பகுதியில் கிளைமோர் குண்டு ஒன்றை விடுதலைப் புலிகள் கைப்பற்றியுள்ளனர்.

தாண்டியடிக்குளம் பகுதியில் வண்டர் மூலை என்ற இடத்தில் இந்தக் கிளைமோர் குண்டு கைப்பற்றப்பட்டதாகவும் -

இது தொடர்பாக சந்தேகத்தின் பேரில் இரண்டு பேரைத் தாம் கைது செய்திருப்பதாகவும் - விடுதலைப் புலிகள் அறிவித்துள்ளனர். (க-4)

## ஓராண்டு நினைவஞ்சலி

தோற்றம் 1916 - 11 - 09



மறைவு 2000 - 11 - 06

அமரர்

### கணபதி செல்லையா


*திதி: 25-10-2001*

ஆண்டொன்று ஆனதையா ஆறவில்லை எந் துயரம்
நீண்ட தூரம் நீர்சென்ற காரணந்தான் யாமறியோம்
அண்டமதில் எம் வாழ்வு நிலைக்கின்ற நாள்வரையும்
ஆருயிரே உம்மை அவனியிலே நாம் மறவோம்.

*211/23, கோயில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.* (93763) - குடும்பத்தினர்.

## 6ஆம் ஆண்டு நினைவுத்துளிகள்

உதயம் 05 ~ 05 ~ 1953



அஸ்தமனம் 31 ~ 10 ~ 1995

அமரர்

### கதிரவேலு சந்திரராசா (சந்திரன்)

(பொது முகாமையாளர் - வலிகாமம் ப.தெ.வ.அ. சங்கங்களின் கொத்தணி)

**திதி: 25-10-2001 பூர்வபட்ச நவமி**

*பாசத்தின் திருவுருவே! பண்பான அப்பாவே - உம்*
*பாலகரைப் பாதிவழியில் பரிதவிக்க விட்டு*
*பிரிந்து சென்ற மாயமென்ன?*
*கதறி அழுதாலும் எம் கவலை தீராதப்பா!*
*காலங்கள் உள்ளவரை கண்ணீர் தான் எங்களுக்கு!*
*இனியவனே! உம்மை இதயத்தில் இருத்திவிட்டு நாம்*
*இருளில் தவியாய்த் தவிக்கின்றோம்!*
*ஆறாண்டுகள் என்ன ஒரு ஜென்மம் போனாலும்*
*ஆறாது எம் துயரம்!*

உங்கள் பிரிவால் துயருறும்:
மனைவி, பிள்ளைகள்,
பூபாலசிங்கம் குடும்பம்,
கொத்தணி பணிப்பாளர்,
பணியாளர்கள், நண்பர்கள், உறவினர்கள்.

*செருக்கப்புலம் வீதி, கோண்டாவில் கிழக்கு, கோண்டாவில்.*

(93727)

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும் அந்தியேட்டி அழைப்பும்

மலர்வு 13 - 09 - 1945



உதிர்வு 26 - 09 - 2001

திருமதி

### வசந்தனாதேவி வடிவேல்

*(சின்னமலை, வல்வெட்டித்துறை)*

*பண்புடனும், அன்புடனும் வாழ்ந்த உங்களை மறக்க முடியவில்லையே.*

உங்களது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

அன்னாரின் இறுதிக்கிரியைகளில் கலந்துகொண்டவர்களுக்கும், பல்வேறு வகையிலும் உதவிகளைச் செய்து எங்கள் துயரில் பங்குபற்றியோருக்கும், தொலைபேசி, தபால், தந்திமூலம் அனுதாபம் தெரிவித்தவர்களுக்கும் எமது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

எமது இல்லத்தில் நாளை (26.10.2001) வெள்ளிக்கிழமை நடைபெறும் அந்தியேட்டிக்கிரியைகளிலும், மதியபோசனத்திலும் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்களை அன்புடன் அழைக்கிறோம்.

*28, உலகுடைய பிள்ளையார் ஒழுங்கை, வல்வெட்டித்துறை.* கணவர், பிள்ளைகள், மருமக்கள்.

(93726)

## உடற் தகுதிகாண் பரீட்சை

யாழ்ப்பாணம், ஒக். 2

யாழ். பல்கலைக்கழகத்தில் கடந்த 4 ஆம் திகதி நடைபெற்ற உடற்தகுதிகாண் பரீட்சைக்குத் தெரிவுசெய்யப்பட்டவர்களில் அன்றைய தினம் பரீட்சைக்குச் சமுகமளிக்காதோருக்கான மீள் பரீட்சை இன்று வியாழக்கிழமை காலை 9-00 மணிக்கு பல்கலைக்கழக விளையாட்டு மைதானத்தில் நடைபெறும்.

சம்பந்தப்பட்டோரை உரிய ஆவணங்களுடனும், சீருடைகளுடனும் சமுகமளிக்குமாறு யாழ். பல்கலைக்கழக பரீட்சைகளும் நிர்வாகமும் பிரிவு உதவிப் பதிவாளர் அறிவித்திருக்கிறார்.

[ஐ]

## கண்ணீர் அஞ்சலி

எமது வரலாற்றுத்துறை விரிவுரையாளராகிய
செ. கிருஷ்ணராஜா
அவர்களது மாமனார்

### வேலுப்பிள்ளை சின்னத்துரை

அவர்கள் 24-10-2001 இல் காலமான செய்தி கேட்டு துயருற்றிருக்கும் அவரதும் அவரது குடும்பத்தினரதும் துயரில் நாமும் பங்கு கொள்கிறோம்.

வரலாற்றுத்துறையும்,
வரலாற்றுக்கழகமும்.

யாழ். பல்கலைக்கழகம். (93824)

## கண்ணீர் அஞ்சலி

எமது அங்கத்துவ சங்கமான சாவகச்சேரி
ப. தெ. வ. அபி. கூ. சங்கத்தின் உபதலைவர்

### அமரர் நாகமுத்து சின்னத்துரை

அவர்கள் 21-10-2001 இல் அகாலமரணமடைந்ததையிட்டு ஆழ்ந்த அதிர்ச்சி அடைவதுடன், அன்னாரின் இழப்பால் துயருற்றிருக்கும் அவரின் குடும்பத்தினரதும், உறவினரதும் துயரில் நாமும் கலந்து கண்ணீர்க் காணிக்கையால் அனுதாபங்களைத் தெரிவிக்கின்றோம்.

தலைவர்,
பணிப்பாளர்கள், பணியாளர்கள்,
வடமாகாண தெங்கு பனம் பொருள்
கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம்

(சி/18842)

## கண்ணீர் அஞ்சலி

எமது சகோதர உத்தியோகத்தர்
திரு. ந. யோகேந்திரன்
அவர்களது அன்புத் தகப்பனார்

### அமரர் சின்னையா நமசிவாயம்

அவர்கள் கடந்த 23-10-2001 ஆம் திகதியன்று இறைபதம் அடைந்ததையிட்டு அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

தலைவர், உறுப்பினர்கள், செயலாளர்;
உத்தியோகத்தர்கள், ஊழியர், நலன்புரிச்சங்கம்.

பச்சிலைப்பள்ளி பிரதேச சபை,
பளை. (93828)

## நவராத்திரி விழா —

(4 ஆம் பக்கத் தொடர்ச்சி)

விழா இன்று 25 ஆம் திகதி வியாழக்கிழமை முற்பகல் 10 மணி முதல் பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் இடம்பெறும்.

இந்த நிகழ்வில் சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி மாணவர்களின் 'அருள் சுரந்து காப்பதில் பெரிதும் முன்னிற்பவர் அன்னையா தந்தையா' என்ற தலைப்பிலான பட்டிமன்றம் இடம்பெறும். (ம-100)

★ ஏழாலை மேற்கு சைவ சன்மார்க்க வித்தியாசாலையில் நவராத்திரி விழா நாளை வெள்ளிக்கிழமை காலை இடம்பெறவுள்ளது. (ம-86)

★ பருத்தித்துறை நெல்லண்டைப் பத்திரகாளி ஆலயத்தில் நவராத்திரி விழா நாளை நடைபெறும்.

நவராத்திரி விழாவினையொட்டி அன்னைக்கு நிகழ்த்தும் விஷேட பூசைகளை அடுத்து கேதாரகௌரி விரதமும் ஆரம்பமாகிறது. (ம-15)

★ பன்னாகம் அம்பாள் கலை மன்றம் நடத்தும் வாணி விழா இன்று வியாழக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு பண்ணாகம் நெல்லியான் காளி கோவில் முன்றிலில் நடைபெறும்.

வழக்காடு மன்றம், கவியரங்கம், நாடகம், நடனம் ஆகிய நிகழ்வுகள் இடம்பெறவுள்ளன. (ம-28)

★ பருத்தித்துறை ஆத்தியடிப் பிள்ளையார் கோயிலில் நவராத்திரியின் இறுதி நாளான நாளை விசேட பூசைகளும், வன்னி வாழை வெட்டு நிகழ்ச்சியும் நடைபெறும். அன்றைய தினம் மழலைகளுக்கான ஏடு தொடக்கல் நிகழ்ச்சியும் நடைபெறும்.

ஆலய பூசகர் பிள்ளைகளுக்கு ஆசி வழங்கி ஏடு தொடக்கியும் வைப்பார். இதற்கென விசேட பூசையும் நடைபெறும். (ம-16)

★ பருத்தித்துறை வட இந்து மகளிர் கல்லூரியில் வாணி விழா நாளை நடைபெறவுள்ளது.

கல்லூரி அதிபரின் தலைமையில் நடைபெறும் இவ் விழாவில் கல்லூரி மாணவிகளின் கலை நிகழ்ச்சிகளும், சமனச் சொற்பொழிவுகளும் இடம்பெறும். அன்றைய தினம் மழலைகளுக்கு ஏடு தொடக்கல் நிகழ்சசியும் இடம்பெறும். (ம-15)

## நெஞ்சகலா நினைவஞ்சலி

6 ஆம் ஆண்டு 17 ஆம் ஆண்டு



அமரர்
**சுப்பையா மாணிக்கம்**
(Retired Asst. Superintendent of Police)
மலர்வு: 31-12-1919 உதிர்வு: 16-11-1995



அமரர்
**மாணிக்கம் யோகேஸ்வரி**
மலர்வு: 11-06-1927 உதிர்வு: 04-06-1984

திதி: 25 - 10 - 2001

அன்பு, பண்பு, பாசம், அமைதியின் உறைவிடமாய் வாழ்ந்து மறைந்த எங்கள் அன்புத் தெய்வங்களின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஆனைப்பந்தி,
யாழ்ப்பாணம்.

மக்கள். மருமக்கள்.
(சி/18841)

## பாராட்டி வாழ்த்துகிறோம்

அண்மையில் யாழ். பல்கலைக்கழகத்தால் வழங்கப்பட்ட
முதுதத்துவமாணி
பட்டத்தைப் பெற்றுக்கொண்ட
கோப்பாய் ஆசிரிய கலாசாலை
விரிவுரையாளர்

### திரு. ஆ. ஸ்ரீஸ்கந்தமூர்த்தி

அவர்களை: அவர் தம் சேவை மேலும் மேலும் தொடரவும், பட்டம் பெற்றமையையிட்டும் மனமாரப் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

(சி/18844) - நண்பர்கள்

## மரண அறிவித்தல்கள்

### தாமு கணபதிப்பிள்ளை

(வைத்தியர், சோதிடர், முன்னாள் கட்டடப்பகுதி களஞ்சியப் பொறுப்பாளர், ஈழநாடு நிருபர், எழுதுமட்டுவாழ்)

எழுதுமட்டுவாழ் சிவன் கோவிலடியைப் பிறப்பிடமாகவும் கரவெட்டி கிழக்கு, கடுக்காயை வசிப்பிடமாகவும் கொண்ட சோதிடர் தா. கணபதிப்பிள்ளை 22-10-2001 திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் தாமு, காலஞ்சென்ற அன்னம்மா ஆகியோரின் சிரேஷ்ட புத்திரனும், தவமணியின் அன்புக் கணவரும், கிருபாதேவியின் அன்புத்தந்தையும், பாலச்சந்திரனின் (லண்டன்) அன்பு மாமனும், கோ. வரதன், கௌசிகன், தாட்சாயினி ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் கரவெட்டி கிழக்கு, கடுக்காய் இல்லத்தில் 23.10.2001 செவ்வாய்க்கிழமை நடைபெற்றன.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
க. தவமணி (மனைவி)

நிரந்தர முகவரி:
சிவன் கோயிலடி,
எழுதுமட்டுவாழ். (சி/18840)

தற்காலிக முகவரி:
கடுக்காய்,
கரவெட்டி கிழக்கு

### சொக்கலிங்கம் கனகலிங்கம்

(ஓய்வுபெற்ற தபாற் திணைக்கள உத்தியோகத்தர்)

அரியாலையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சொக்கலிங்கம் கனகலிங்கம் நேற்று (24 - 10 - 2001) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சொக்கலிங்கம், அன்னம்மா தம்பதிகளின் மகனும், அன்னலட்சுமியின் அன்புக் கணவரும், ஸ்ரீதயா, சரோஜினி, ஸ்ரீதரன், ஸ்ரீமோகன், ஸ்ரீகாந்தன், ஸ்ரீரமணன் ஆகியோரின் அன்புத் தகப்பனாரும், பாஸ்கரன், நவரட்னராஜா, கல்பனா, கௌரீஸ்வரி ஆகியோரின் அன்பு மாமனாரும், காலஞ்சென்றவர்களான அன்னலிங்கம், தருமலிங்கம், மற்றும் சுந்தரலிங்கம், ராஜேந்திராணி, சண்முகலிங்கம் ஆகியோரின் சகோதரனும், விஸ்வநாதர் (ஆசிரியர்), பத்மநாதன், மாணிக்கவாசகர், காலஞ்சென்ற பாக்கியம் மற்றும் பராசக்தி (ஆசிரியை), சரஸ்வதி, சிவசோதி ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் (25 - 10 - 2001) இன்று வியாழன் காலை 10 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக செம்மணி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
ஸ்ரீமோகன் (மகன்)

26, கனகரட்ணம் வீதி,
அரியாலை,
யாழ்ப்பாணம். (93826)

### சபாபதிப்பிள்ளை தர்மலிங்கம்

[உரிமையாளர், கோப்பாய் பிரதேச செயலக சிற்றுண்டிச்சாலை]

அல்வாய் திக்கத்தைப் பிறப்பிடமாகவும் தற்போது அச்சுவேலி தோப்பை வசிப்பிடமாகவும் கொண்ட சபாபதிப்பிள்ளை தர்மலிங்கம் 23-10-2001 செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சபாபதிப்பிள்ளை தம்பதியினரின் அன்பு மகனும் மேரி ஹாட்ஸ் அவர்களின் அன்புக் கணவரும் மோ அனித்தா (வேம்படி மகளிர் கல்லூரி-விஞ்ஞானப்பிரிவு 2003 உயர்தரம்) அவர்களின் பாசமிகு தந்தையும், தெய்வநாதன் பாசமிகு சகோதரனும் மரியாம்பிள்ளை (மின் அத்தியட்சர் மல்லாவி), அந்தோனிப்பிள்ளை, மரியதாஸ், கனகரத்தினம் ஆகியோரின் மைத்துனரும் மல்லிகா, சாந்தி (ஜேர்மனி), செபஸ்ரியன், பிரான்சிஸ் (கால்நடை உற்பத்தி சுகாதாரத் திணைக்களம்) ஆகியோரின் சிறிய தந்தையும் தர்மபாலன் (லங்கா சிமெந்து லிமிட்டெட்), இராசசேகரம் (ஜேர்மனி), பிரசன்னா, காமினி (சுவிஸ்), சைலஜா, கலா, ஜீவா, சசி, இந்திரன், வாசுகி ஆகியோரின் மாமனாரும் ஆவார்.


அன்னாரது பூதவுடல் இன்று (25—10—2001) வியாழக்கிழமை பிற்பகல் 2.00 மணிக்கு இல. 859/6, ஆஸ்பத்திரி வீதியிலிருந்து புனித யுவானியார் ஆலயத்திற்கு திருப்பலிக்காக எடுத்துச்செல்லப்பட்டு திருப்பலியின் பின்னர் கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:-
மேரி ஹாட்ஸ் (மனைவி)

859/6, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம். (93831)

# பரிசுதிய சேமிப்புச் சான்றிதழ்கள் - ஸ்ரீரேகா





NSB உங்கள் குடும்ப வங்கி

## 18-10-2001 இல் நடைபெற்ற பரிசுதிய சேமிப்புச் சான்றிதழ்களின் 27ஆவது சீட்டிழுப்பில் தேசிய சேமிப்பு வங்கி யாழ்ப்பாணம் கிளையில் பரிசுபெற்ற 172 அதிர்ஷ்டசாலிகளின் விவரம்:

நான்காவது பரிசு ரூபா 5,000/=

| | | | | |
|---|---|---|---|---|
| 146 | 13N | 0248 | எம். ஜெ. இராஜரட்ணம் | யாழ்ப்பாணம் |

ஐந்தாவது பரிசு ரூபா 2,000/=

| | | | | |
|---|---|---|---|---|
| 122 | 18K | 0551 | என். இரட்ணேஸ்வரன் | சுழிபுரம் |
| 098 | 15V | 0407 | ஆர். சுந்தானந்தராஜா | யாழ்ப்பாணம் |
| 002 | 13O | 0149 | பி. சிவநேசன் | காரைநகர் |
| 147 | 15Y | 0514 | பி. சரோஜினிதேவி | கோப்பாய் |
| 060 | 04E | 0808 | எஸ். வி. கே. சர்வேஸ்வரா ஜோதி | சண்டிலிப்பாய் |
| 118 | 13N | 0235 | எஸ். கந்தசாமி | புத்தூர் |
| 065 | 12S | 0760 | பி. சங்கரப்பிள்ளை | நெடுந்தீவு |
| 083 | 12S | 0752 | ரி. நாகராஜா | உரும்பிராய் |
| 024 | 10C | 0314 | எஸ். ஐ. ஜோகிஸ்வர சர்மா | நல்லூர் |

ஆறாவது பரிசு ரூபா 1,000/=

| | | | | |
|---|---|---|---|---|
| 097 | 14E | 0153 | எம். நாமலிங்கம் | மானிப்பாய் |
| 022 | 16V | 0236 | பி. ஸ்ரீதரன் | காரைநகர் |
| 017 | 14G | 0925 | எஸ். கே. சரவணபவன் | கொக்குவில் |
| 056 | 10F | 0900 | ரி. குணநேசன் | கொக்குவில் |
| 146 | 13N | 0251 | எம். ஜெ. இராஜரட்ணம் | யாழ்ப்பாணம் |
| 047 | 10F | 0284 | டபிள்யூ. அருளானந்தம் | யாழ்ப்பாணம் |
| 103 | 14E | 0412 | டி. செல்வேஸ்வரன் | மானிப்பாய் |
| 035 | 13P | 0036 | பி. பிரணவன் | சுண்டுக்குளி |
| 125 | 14F | 0102 | எம். சந்திரதாசன் | நல்லூர் |
| 121 | 12D | 0553 | ஈ. எஸ். தவேந்திரராசா | கோப்பாய் |
| 062 | 10F | 0764 | பி. சசிரேகா | கொக்குவில் |
| 150 | 13N | 0761 | எஸ். ஜெகதீஸ்வரி | கோண்டாவில் |
| 011 | 14B | 0833 | என். தமயந்தி | சங்கானை |
| 139 | 13O | 0938 | கே. கந்தசாமி | நீர்வேலி |
| 127 | 03S | 0724 | எஸ். வினோத் | குருநகர் |
| 064 | 15L | 0849 | ஏ. தேவதாசன் | யாழ்ப்பாணம் |
| 112 | 13A | 0165 | வி. கனகதுர்க்கா | தெல்லிப்பழை |
| 002 | 16O | 0854 | ஏ. ருக்மணிதேவி | ஆவரங்கால் |
| 043 | 04E | 0840 | வி. எஸ். சிவரட்ணம் | சுன்னாகம் |
| 072 | 14B | 0758 | எஸ். ரட்ணசிங்கம் | அச்சுவேலி |
| 004 | 15K | 0127 | எஸ். அஞ்சலிதேவி | வல்வெட்டித்துறை |
| 091 | 10F | 0559 | ஜீ. மாதங்கி | வட்டுக்கோட்டை |
| 001 | 16V | 0329 | ஆர். சசிகலாதேவி | யாழ்ப்பாணம் |
| 082 | 10C | 0447 | கே. திருஞானம்பந்தர் | சாவகச்சேரி |
| 049 | 09X | 0153 | எம். பத்மநாதன் | யாழ்ப்பாணம் |
| 048 | 12S | 0895 | ஏ. ஜெ. விமலநாதன் | யாழ்ப்பாணம் |
| 052 | 16V | 0076 | ரி. அஞ்சனி | பண்டத்தரிப்பு |
| 077 | 13S | 0572 | ஏ. விஜயகலா | யாழ்ப்பாணம் |
| 044 | 10F | 0863 | எஸ். ரிசிகோபன் | யாழ்ப்பாணம் |
| 076 | 13P | 0130 | வை. கைலாஸ் | கந்தர்மடம் |
| 149 | 10E | 0078 | என். கவிதாங்கனி | நல்லூர் |
| 083 | 14B | 0922 | டபிள்யூ. கலைவாணி | தொண்டமானாறு |
| 006 | 14F | 0204 | பொ. ஆனந்தசிவம் கேதீஸ் | யாழ்ப்பாணம் |
| 066 | 10C | 0065 | எஸ். சரோஜினிதேவி | உரும்பிராய் |
| 012 | 16V | 0148 | எஸ். யோகேஸ்வரி | வரணி |
| 054 | 14B | 0634 | ஜெ. சுஜீவன் | கொக்குவில் |
| 048 | 05N | 0475 | ஏ. மகாலிங்கம் | சாவகச்சேரி |
| 067 | 14B | 0320 | பி. தயாபரன் | பண்டத்தரிப்பு |
| 135 | 14E | 0063 | என். தேனுகா | கந்தர்மடம் |
| 155 | 14F | 0961 | கே. சுஜன் | வண்ணார்பண்ணை |
| 108 | 13S | 0254 | என். சுகன்யா | அச்சுவேலி |
| 112 | 15Y | 0997 | வி. சுப்பரமணியம் | வட்டுக்கோட்டை |
| 096 | 02J | 0480 | ரி. ரி. சத்தியா | நாரந்தனை |
| 151 | 14F | 0761 | ஏ. கிருஷ்ணமூர்த்தி | சுழிபுரம் |
| 129 | 14E | 0396 | ஏ. வெங்கடரமணா | கந்தர்மடம் |
| 069 | 09A | 0424 | கே. சுதர்ஷன் | சண்டிலிப்பாய் |
| [illegible] | 16V | 0326 | எஸ். சிவகுமார் | நல்லூர் |
| [illegible] | 13H | 0201 | எம். ஜீவன் | நயினாதீவு |
| [illegible] | 12S | 0763 | என். சந்திரராஜ் | அச்சுவேலி |
| [illegible] | 13S | 0397 | என். கீர்த்திகா | அச்சுவேலி |
| [illegible] | 13B | 0174 | ரி. டிஸஞ்சியா | யாழ்ப்பாணம் |
| 095 | 16V | 0630 | ரி. ஐங்கரமூர்த்தி | வட்டுக்கோட்டை |
| 086 | 09A | 0159 | ரி. நவராசா | கோப்பாய் |
| 137 | 09N | 0503 | வி. சுப்பிரமணியம் | வட்டுக்கோட்டை |
| 131 | 16N | 0221 | எம். இராஜகோபாலன் | நீர்வேலி |
| 056 | 16V | 0410 | எஸ். குணசீலன் | கோப்பாய் |
| 061 | 07N | 0922 | எஸ். மகேஸ்வரி | தொண்டமனாறு |
| 132 | 14E | 0547 | கே. கே. சுப்பிரமணிய ஐயர் | தாவடி |
| 034 | 13P | 0600 | ஆர். அகிலாண்டேஸ்வரி | அச்சுவேலி |
| 034 | 13B | 0124 | எம். பராசக்தி | கோப்பாய் |
| 015 | 12S | 0519 | வி. மதனகுமார் | யாழ்ப்பாணம் |
| 031 | 12S | 0320 | ஆர். எஸ். யோகீஸ்வரக் குருக்கள் | அத்தியடி |
| 022 | 14B | 0085 | என். கீர்த்திகா | கோண்டாவில் |
| 108 | 13A | 0083 | எம். விக்னேஸ்வரன் | யாழ்ப்பாணம் |
| 088 | 13S | 0840 | ரி. தவலட்சுமி | தொண்டமனாறு |
| 015 | 14G | 0202 | ஆர். இராஜராஜன் | வட்டுக்கோட்டை |
| 153 | 13A | 0460 | ஜெ. இராஜராஜேஸ்வரி | சுன்னாகம் |
| 011 | 10F | 0979 | எஸ். தாயு | கைதடி |
| 139 | 12O | 0134 | எஸ். மோகனமூர்த்தி | கொழும்புத்துறை |
| 131 | 13A | 0148 | ஏ. தவக்குமாரன் | மானிப்பாய் |
| 129 | 13G | 0627 | எஸ். சுஜீவன் | அச்சுவேலி |
| 101 | 14B | 0234 | ஏ. குணரட்ணம் | யாழ்ப்பாணம் |
| 118 | 13A | 0932 | கே. கலைவாணி | வட்டுக்கோட்டை |
| 036 | 13P | 0549 | ரி. நவரத்தினசிங்கி | நல்லூர் |
| 008 | 09O | 0166 | பி. பிரபாகரன் | ஆனைக்கோட்டை |
| 133 | 15Y | 0240 | பி. தயாபரன் | பண்டத்தரிப்பு |
| 033 | 09O | 0603 | பி. ரட்ணம் | சாவகச்சேரி |
| 131 | 03S | 0881 | ஏ. ஜனார்த்தன் | குருநகர் |
| 012 | 09O | 0205 | ஆர். கந்தப்பா | நாரந்தனை |
| 108 | 12C | 0028 | ஈ. சபாரட்ணம் | நல்லூர் |
| 155 | 09N | 0056 | கே. நளாயினி | திருநெல்வேலி |
| 119 | 15V | 0886 | எஸ். கீதாஞ்சலி | நாவற்குழி |
| 010 | 12S | 0952 | எஸ். சிவகுமார் | கொட்டடி |
| 056 | 16E | 0371 | பி. விநோத் | யாழ்ப்பாணம் |
| 053 | 02R | 0795 | பி. பி. ஆர். தனேந்திரன் | ஈச்சமோட்டை |
| 148 | 14F | 0424 | ரி. சிவநேசன் | ஆனைக்கோட்டை |
| 136 | 14E | 0697 | பி. அருள்மொழி | கந்தர்மடம் |
| 122 | 18A | 0524 | ரி. பூமணி | யாழ்ப்பாணம் |
| 091 | 13A | 0782 | எஸ். பாலசுப்பிரமணியம் | யாழ்ப்பாணம் |
| 043 | 04V | 0429 | கே. பிரணவி | நல்லூர் |
| 019 | 15K | 0207 | எஸ். ஜெயானி | ஆனைக்கோட்டை |
| 152 | 15Y | 0206 | ஜி. நடேசர் | அரியாலை |
| 083 | 13N | 0292 | ரி. லக்சன் | யாழ்ப்பாணம் |
| 028 | 13P | 0519 | ஆர். உதயகுமார் | கந்தர்மடம் |
| 024 | 10C | 0491 | எஸ். ஐ. யோகிஸ்வர சர்மா | நல்லூர் |
| 032 | 13H | 0003 | எஸ். சந்திரபாலன் | வட்டுக்கோட்டை |
| 023 | 12P | 0355 | எஸ். எஸ். தங்கராஜா | மானிப்பாய் |
| 077 | 13N | 0075 | எஸ். லோகுலன் | சாவகச்சேரி |
| 018 | 13P | 0589 | என். விரபாண்டியதாசன் | வட்டுக்கோட்டை |
| 042 | 04E | 0005 | ரி. சி. டயனிசியஸ் | யாழ்ப்பாணம் |
| 142 | 16N | 0702 | எஸ். பாலசிங்கம் | யாழ்ப்பாணம் |
| 125 | 03S | 0163 | ரி. தனேஸ்வரி | நீர்வேலி |
| 028 | 09X | 0975 | வி. தேவேந்திரம் | யாழ்ப்பாணம் |
| 097 | 12S | 0356 | ரி. தனுசியா | கோண்டாவில் |
| 024 | 13B | 0207 | ஸ்ரீதேவராணி | அச்சுவேலி |
| 112 | 13S | 0444 | என். நிரோஜா | அச்சுவேலி |
| 010 | 16O | 0938 | ரி. தியாகராஜா | கோண்டாவில் |
| 114 | 12D | 0947 | ஏ. தங்கராசா | இணுவில் |
| 011 | 14G | 0728 | யு. விதுசன் | அத்தியடி |
| 015 | 12S | 0488 | வி. மனதகுமார் | யாழ்ப்பாணம் |
| 010 | 14G | 0631 | பி. இரத்சரட்ணம் | காரைநகர் |
| 056 | 12S | 0479 | எஸ். சுப்பிரமணியசெட்டியார் | கொக்குவில் |
| 091 | 13P | 0135 | என். வரதராஜன் | உரும்பிராய் |
| 122 | 08V | 0906 | எஸ். சச்சிதானந்தராஜா | சித்தன்கேணி |
| 010 | 13B | 0319 | எஸ். சுமித்திரா | தாவடி |
| 057 | 13S | 0718 | என். சர்வேஸ்வரன் | கரவெட்டி |
| 142 | 12C | 0810 | ஜி. லக்சி நிவேதா | நீர்வேலி |
| 026 | 09X | 0613 | பி. சிவநேசன் | யாழ்ப்பாணம் |
| 031 | 09X | 0474 | எஸ். ஜெ. செபரட்ணம் | யாழ்ப்பாணம் |
| 111 | 13A | 0037 | ஜி. குணரத்தினம் | ஓட்டுமடம் |
| 051 | 02R | 0475 | எஸ். சிதம்பரநாதன் | வட்டுக்கோட்டை |
| 078 | 16X | 0330 | ஆர். ஜெயசேகரன் | கந்தர்மடம் |
| 083 | 13P | 0470 | ரி. கிரிதரன் | அரியாலை |
| 119 | 13A | 0741 | பி. சுபமூர்த்தி | காரைநகர் |
| 019 | 16O | 0538 | ஏ. எம். பிறிஜெட் | குருநகர் |
| 085 | 16U | 0954 | ஆர். எஸ். ரட்ணவேல் | கந்தர்மடம் |
| 065 | 14E | 0912 | எஸ். அஜந்தினி | யாழ்ப்பாணம் |
| 143 | 13G | 0644 | பி. சதாசிவம் | அரியாலை |
| 093 | 16V | 0876 | ரி. நாகலிங்கம் | கோண்டாவில் |
| 136 | 16U | 0062 | எஸ். தயாகரன் | அச்சுவேலி |
| 123 | 03S | 0571 | ஜி. பி. செபஸ்ரியாம்பிள்ளை | யாழ்ப்பாணம் |
| 102 | 02J | 0512 | ஐ. துரைராசா | கொழும்புத்துறை |
| 099 | 16X | 0697 | எஸ். கபிலன் | கோண்டாவில் |
| 020 | 15K | 0679 | ரி. சபாரட்ணம் | யாழ்ப்பாணம் |
| 117 | 14E | 0690 | வி. மனோராணி | சுழிபுரம் |
| 121 | 12C | 0267 | வி. சுப்பிரமணியம் | வட்டுக்கோட்டை |
| 154 | 15Y | 0335 | துசாரா குணரட்ணம் | தெல்லிப்பழை |
| 009 | 09O | 0330 | பி. பிரபாகரன் | ஆனைக்கோட்டை |
| 006 | 14G | 0363 | ஆர். மங்களேஸ்வரி | கந்தர்மடம் |
| 018 | 12S | 0434 | எஸ். வேலும்மயிலும் | வட்டுக்கோட்டை |
| 064 | 09A | 0752 | ஜே. கதிர்காமநாதன் | சுழிபுரம் |
| 015 | 12D | 0828 | ரி. என். ரி. கஜேந்திரன் | யாழ்ப்பாணம் |
| 123 | 16X | 0431 | ஆர். குமாரன் | சுன்னாகம் |
| 145 | 16U | 0805 | என். இராமகிஸ்ணன் | வண்ணார்பண்ணை |
| 098 | 16X | 0832 | கே. ஜெயகுமார் | உரும்பிராய் |
| 136 | 16N | 0044 | வை. தீபிகா | புத்தூர் |
| 045 | 16E | 0241 | கே. சிவநாதன் | யாழ்ப்பாணம் |
| 148 | 14F | 0218 | ரி. சிவநேசன் | ஆனைக்கோட்டை |
| 027 | 09O | 0505 | பி. டொறிங்டன் | குருநகர் |
| 054 | 12S | 0029 | கே. பிரியதர்சினி | திருநெல்வேலி |
| 099 | 10F | 0351 | ஜே. குணலிங்கம் | பருத்தித்துறை |
| 126 | 14E | 0758 | கே. கார்த்திகா | யாழ்ப்பாணம் |
| 144 | 14E | 0980 | ஆர். பகீரதன் | உரும்பிராய் |
| 049 | 12S | 0165 | வி. சரவணபவன் | அச்சுவேலி |
| 063 | 04E | 0888 | ரி. பிறேம்குமார் | கொக்குவில் |
| 153 | 12O | 0081 | ரி. சிதம்பரப்பிள்ளை | சாவகச்சேரி |
| 153 | 09N | 0300 | ரி. ஜெயகீதா | யாழ்ப்பாணம் |
| 042 | 16E | 0541 | எஸ். பத்மகுமார் | நல்லூர் |
| 113 | 12C | 0378 | ஜி. காருண்யா | மானிப்பாய் |
| 001 | 13B | 0846 | கே. சிவசுப்பிரமணியம் | பண்டத்தரிப்பு |
| 039 | 12S | 0138 | எஸ். இராசரத்தினம் | உரும்பிராய் |
| 118 | 12D | 0111 | ஜே. சிவசுப்பிரமணியம் | அச்சுவேலி |

(C/18837)

**தேசிய சேமிப்பு வங்கி**
யாழ்ப்பாணக் கிளை.



# புங்குடுதீவு கண்ணகி அம்மன் ஆலய நவராத்திரி விழா

இவ்ஆலய நவராத்திரி விழா 17.10.2001இல் ஆரம்பமாகி நடைபெற்று வருகின்றது.

இன்று (25.10.2001) வியாழக்கிழமை நண்பகல் 12 மணிக்கு நடைபெறும் விசேட அபிஷேகத்தைத் தொடர்ந்து பி.ப. 3 மணிக்கு கொலு மண்டப பூசை நடைபெறும். நாளை (26.10.2001) வெள்ளிக்கிழமை நண்பகல் 11.30 மணிக்கு அபிஷேகமும் பி.ப. 3 மணிக்கு மானம்பூவிழாவும் நடைபெறும்.

சனிக்கிழமை (27.10.2001) காலை 9.00 மணிக்கு பிராயச்சித்த அபிஷேகமும் ஊஞ்சலும் நடைபெறும்.

எந்தவித இராணுவக் கட்டுப்பாடும் இல்லாமலும் அனுமதிச்சீட்டு இல்லாமலும் பக்தர்கள் வழிபாட்டில் கலந்துகொள்ளலாம்.

புங்குடுதீவு. (93830) -ஆலய பரிபாலன சபை.

உ

"தலை கொடுத்தேனும் கலை காப்போம்"



## பண்ணாகம் அம்பாள் கலை மன்றம் நடத்தும் வாணி விழா

காலம் : இன்று (25.10.2001) வியாழக்கிழமை பி.ப. 2 மணி
இடம் : பண்ணாகம் நெல்லியான் காளி கோயில்
தலைவர் : திரு.சு.கலாரூபன் அவர்கள்
பிரதம விருந்தினர் : செல்வி மாரிமுத்து ஆசைமுத்து
(பிரதம லிகிதர் உ.அ.அ. அலுவலகம், சங்கானை)
சிறப்பு விருந்தினர் : செல்வி நேசம்மா இராமலிங்கம்
(ஓய்வுபெற்ற பிரதி அதிபர், பண்ணாகம் மெய்கண்டான் மகாவித்தியாலயம்)

கலை நிகழ்வுகள்: ❖ நடன அரங்கம்
❖ வழக்காடு மன்றம்:

**குற்றவாளிக்கூண்டில் இன்றைய இளைஞர்களும் யுவதிகளும்**

பிரதம நீதிபதி: திரு.அ.குமாரவேல் B.A.(Hons), S.L.P.S.
(விரிவுரையாளர், யாழ்ப்பாணக்கல்லூரி)

**குற்றம் சுமத்துவோர்**
சட்டத்தரணி திரு.பொ.அருந்தவநாதன் B.A. (Hons)
விரிவுரையாளர் யாழ்ப்பாணக்கல்லூரி
சட்டத்தரணி ந.விஜயசுந்தரம் B.A. (Eco.Special)
ஆசிரியர் கொக்குவில் இந்து. உதவி ஆசிரியர், ஊரம்பி)
சட்டத்தரணி E.S.பவன்
யாழ். பல்கலைக்கழகம்

**மறுத்து வாதிடுவோர்**
சட்டத்தரணி திரு.த.வேல்நம்பி (B.Com. (Hons) M.Phil.
விரிவுரையாளர் வணிகத்துறை, யாழ். பல்கலை.
சட்டத்தரணி திரு.நா.புவனேந்திரன்
B.A. (Tamil Special)
ஆசிரியர், யாழ். மத்திய கல்லூரி
சட்டத்தரணி திரு.சு.ஐங்கரன் B.A. (Hons) (Eco. Special
ஆசிரியர், உடுவில் மகளிர் கல்லூரி.

கவியரங்கம் : "சொல்லடி சிவசக்தி"
நடுவர் செல்வி ந.பங்கயச்செல்வி B.A. (Hons).

நாடகம் : பண்ணாகம் அம்பாள் கலை மன்றத்தின் 36ஆவது தயாரிப்பான
**ஒன்றான உணர்வுகள்** (சமூக சீர்திருத்த நாடகம்)
பண்ணாகம் அம்பாள் கலைமன்றத்தின் 37ஆவது தயாரிப்பான
**திருப்புமுனை** (சமூக சீர்திருத்த நாடகம்)

பண்ணாகம், சுழிபுரம். - நிர்வாகம்.

விழா சிறப்புற வாழ்த்துகின்றோம்!
ஸ்ரீ வரதராஜா வெதுப்பகம், பிரதான வீதி, சுழிபுரம். (93825)
கலியுகன் தொலைத்தொடர்பகம், வழக்கம்பரை, பண்ணாகம். T.P. - 070 212410



# பாராட்டி வாழ்த்துகின்றோம்



யாழ். பல்கலைக்கழகத்தின்
20ஆவது பட்டமளிப்பு விழாவில்
'முதுகலைமாணி'ப்பட்டம் வழங்கிக்
கௌரவிக்கப்பட்ட அருளொளி வீசும் அற்புதஞானி

**அருட்கவி சீ. விநாசித்தம்பி ஐயா**

அவர்களை மனமாரப் பாராட்டுவதுடன் அவரின் அருளாசி மேன்மேலும் கிடைக்கப்பெற எல்லாம்வல்ல ஸ்ரீ நாகவரத நாராயணனைப் பிரார்த்திக்கின்றோம்.

சிறிநாதன் களஞ்சியம், 961, கே.கே.எஸ், வீதி, யாழ்ப்பாணம்.
செல்லையா குடும்பம், முருகானந்தன் குடும்பம். (93827)


# இன்று உங்கள் பிறந்தநாள்



அமரர்
## முருகேசு பரமேஸ்வரன்
(B.A.Mad) SLPS - I
(முன்னாள் அதிபர், செங்குந்த இந்துக் கல்லூரி)

சென்ற வருடம் இந்த நாள்கள் உங்களுடனே உவந்து மகிழ்ந்தோம்.
இந்த வருடம் இந்த நாளில் உங்களைக் காணோம்!
உவகை இழந்தோம்!
பசுமையான நினைவுகளுடன்...

உயர்தரம் - 1989-90 மாணவர் சார்பில்
சி.பத்மராஜா, ஏ.ஞானசேகர் மற்றும்
ந.அமிர்தலிங்கம்.

(C/18838)

# மரண அறிவித்தல்

## வேலுப்பிள்ளை சின்னத்துரை

சாவகச்சேரி, பெருங்குளம் சந்தியைப் பிறப்பிடமாகவும் கலட்டி ஒழுங்கை, கோண்டாவில் மேற்கை வசிப்பிடமாகவும் கொண்ட வேலுப்பிள்ளை சின்னத்துரை நேற்று (24.10.2001) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சரஸ்வதி (பூபதி) அவர்களின் அன்புக் கணவரும் தில்லிமலர் (இந்தியா), சிவச்சந்திரராஜன் (ஜேர்மனி), ஜெயச்சந்திரராஜன் (பிரான்ஸ்), திருமதி ஜெயானந்தி (கொழும்பு), திருமதி சிவகுமாரி கிருஷ்ணராஜா (ஆசிரியை, யாழ்.கோண்டாவில் இந்து மகா வித்தியாலயம்) ஆகியோரின் அன்புத் தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (25.10.2001) வியாழக்கிழமை பிற்பகல் 3.00 மணிக்கு (இலங்கை நேரம்) அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தாவடி இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்:
செ.கிருஷ்ணராஜா (மருமகன்)
கலட்டி ஒழுங்கை, கோண்டாவில் மேற்கு.

# கொடிகாமம் பனை தென்னைவள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம் (வ-து)

## கிளைக்குழுக்களைத் தெரிவு செய்தல் - 2001.11.03

மேற்படி சங்கத்தின் துணைவிதி 20-02இன்படி என்னால் ஆக்கப்பட்டு அறிவிக்கப்பட்ட ஒழுங்குவிதிகளுக்கு அமைய மேற்படி சங்கத்தின் பின்வரும் கிளைகளின் கிளைக்குழுக்களைத் தெரிவு செய்வதற்காக இச்சங்கத்தின் எல்லாக் கிளைகளினதும் பொதுச்சபைக் கூட்டங்கள் மேற்படி ஒழுங்கு விதிகளின் பந்தி 09இற்கமைய கீழ்க்குறிப்பிடப்படும் கால அட்டவணைப்படி நடைபெறும் என்பதை எல்லா உறுப்பினர்களுக்கும் இத்தால் அறிவிக்கப்படுகின்றது. ஆகவே தயவுசெய்து கிளைப் பொதுச்சபைக் கூட்டங்களுக்கு சமுகமளிக்கத் தகைமை பெற்ற உறுப்பினர்கள் யாவரும் அந்தந்தக் கிளைகளின் கிளைப் பொதுச்சபைக் கூட்டங்களுக்குத் தவறாது சமுகமளித்து கிளைக்குழுக்களைத் தெரிவுசெய்து கொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றேன்.

கிளைப் பொதுச்சபைக் கூட்டம் ஆரம்பம் : 2001-11-03 சனிக்கிழமை முற்பகல் 10.00
கூட்டம் நடைபெறும் இடங்கள் விவரம் கீழ்வருமாறு:

| தொ. இல. | கிளை இல. | கிளையின் பெயர் | கூட்டம் நடைபெறும் இடம் | தவிசாளர் பெயர் |
|---|---|---|---|---|
| 01. | 207 | மந்துவில் | சங்க தலைமைக் காரியாலயம் (நெல்லியடி) | திருமதி க.இந்திராணி மா.கூ.அ.அலுவலர் |
| 02. | 208<br>209 | கச்சாய்<br>அல்லாரை | வெள்ளாம் போக்கட்டி பாலர் பாடசாலை | திரு.தா.செல்வசோதி கூ.பரிசோதகர் |
| 03. | 210பி<br>210சி | கொடிகாமம்<br>கொடிகாமம் | கொடிகாமம் ப.நோ.கூ.சங்கக் கட்டடம் சந்தைக்கு அருகில் | திரு.ஆ.நாகலிங்கம் கூ.பரிசோதகர் |
| 04. | 211ஏ | தவசிகுளம் | தவசிகுளம் றோ.க.த.க. பாடசாலை | திரு.பொ.சிவலிங்கம் மா.கூ.அ.அலுவலர் |
| 05. | 211பி<br>212 | பாலாவி<br>உசன் | தவசிகுளம் றோ.க.த.க. பாடசாலை | திரு.கி.குமரகுருலிங்கம் த.கா.பரிசோதகர் |
| 06. | 213 | மிருசுவில் | கொடிகாமம் ப.நோ.கூ.சங்க கட்டடம் சந்தைக்கு அருகில் | திரு.சு.கணேசு கூ.பரிசோதகர் |
| 07. | 214<br>215<br>216 | வடமிருசுவில்<br>எழுதுமட்டுவாள்<br>எழுதுமட்டுவாள் | கொடிகாமம் ப.நோ.கூ.சங்க கட்டடம் | திரு.இ.விஜயமோகனராஜா கூ.பரிசோதகர் |
| 08. | 217<br>221 | நாவற்காடு<br>தனிவளை | வரணி 224ஆம் கிளை | திரு.கே.அருந்தவநாதன் கூ.பரிசோதகர் |
| 09. | 218<br>224<br>223 | இடைக்குறிச்சி<br>குமுக்களை<br>முத்தட்டு | வரணி 224ஆம் கிளை | திரு.பொ.மகேஸ்வரன் கூ.பரிசோதகர் |
| 10. | 220<br>222 | வடவரணி<br>கறுக்காய் | கந்தப்பெருமாள் சனசமூக நிலையம் | திரு.எஸ்.சண்முகநாதன் கூ.பரிசோதகர் |
| 11 | 219 | இயற்றாலை | சங்கத் தலைமைக்காரியாலயம் (நெல்லியடி) | திரு.ஐ.நாகேஸ்வரன் கூ.பரிசோதகர் |

சு.கணேசமூர்த்தி,
கூ.அ.உ.ஆணையாளர் (ப.தெ.)
யாழ்ப்பாணம்.

கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் அலுவலகம்,
யாழ்ப்பாணம்.

(93820)

# பண்ணிசை வகுப்பு நாளை ஆரம்பம்

யாழ்ப்பாணம், ஒக்.25

நாவலர் தர்மகர்த்தா சபையினரால் நடத்தப்படும் பண்ணிசை வகுப்பு, பாலபண்டிதர் வகுப்பு, சமஸ்கிருத வகுப்பு என்பனவற்றுக்கான ஆரம்ப வைபவம் விஜயதசமிதினமான நாளை வெள்ளிக்கிழமை காலை 9 மணிக்கு வண்ணை. நாவலர் மகா வித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது.

மேற்படி வகுப்புக்களில் பங்கு கொள்ள விரும்புபவர்கள் வண்ணை. நாவலர் மகா வித்தியாலய அதிபருடன் தொடர்புகொள்ளலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது.

(ம-7)


## UNIVERSITY OF JAFFNA, SRI LANKA
### FACULTY OF GRADUATE STUDIES
**Postgraduate Diploma in Public Administration**

Faculty of Graduate Studies, University of Jaffna will entertain applications from Graduates of recognized Universities up to 2001.11.23 for the above mentioned course.

The Postgraduate Diploma Programme is of one year duration.

Lectures are conducted on weekdays evenings (from 4 p.m. to 6 p.m.) and Saturdays (from 9 a.m. to 1 p.m.)

Medium of Instruction : English

Fees :

| | |
|---|---|
| Course Fee | : Rs. 20,000/- |
| Application Fee | : Rs.100/- |
| Registration Fee | : Rs.750/- |
| Library Fee | : Rs. 750/- per year. |
| Library Deposit | : Rs. 1,000/- (Refundable) |

Course fee should be paid in full at the time of enrolment.

Those who wish to obtain the application forms in person are required to produce a receipt from People's Bank, University Branch or Shroff, Finance Branch of the University of Jaffna on a payment of Rs. 100/- per form. Those who wish to obtain the forms by post are requested to send a Money Order/Postal Order for Rs. 100/- drawn in favour of Bursar, University of Jaffna together with a self - addressed Rs. 3.50/- stamped envelope of 23x10cm size.

Completed applications should be submitted to the Dean's Office, Faculty of Graduate Studies, University of Jaffna on or before 2001.11.23.

REGISTRAR.
2001.10.20 (C/18839)

**ராஜா** யாழ்ப்பாணம்
விஜய், சிம்ரன் நடித்த
**ப்ரியமானவளே**
நாளை முதல்
குணால், மோனல் நடித்த
**பார்வை ஒன்றே போதுமே**
(C/18719)

**நாகம்ஸ்**
இன்று முதல்
M.G.R., ஜெயலலிதா, நாகேஷ் நடித்த
**ஆயிரத்தில் ஒருவன்**
காட்சிகள்:- 11.00, 2.30 (பி.ப.)

சகலருக்கும் ஒரே சட்ட விதிகள்தான்

# பயண அனுமதியின்றி அரசியல்வாதிகளும் யாழ்ப்பாணத்துக்குச் செல்ல முடியாதாம்!

## ஹெலி ரூர்ஸ் அதிகாரி கூறுகிறார்

கொழும்பு,ஒக்.25

பாதுகாப்பு அமைச்சின் பயண அனுமதியின்றி எந்தவோர் அரசியல் கட்சிப் பிரதிநிதிகளும் யாழ்ப்பாணத்திற்குச் செல்ல முடியாது.

விமானப் படையின் ஹெலி ரூர்ஸ் நிறுவன அதிகாரி இவ்வாறு கூறியுள்ளார்.

தென்பகுதியிலிருந்து எந்தவொரு நபரும் யாழ்ப்பாணம் செல்ல வேண்டுமானால் பாதுகாப்பு அமைச்சின் பயண அனுமதியை முன்கூட்டியே பெற்றுக்கொள்ள வேண்டும் என்ற நடைமுறை சகலருக்கும் பொருந்தும்.

ஹெலி ரூர்ஸ் நிறுவனமும், பாதுகாப்பு அமைச்சின் பயண அனுமதியுள்ளவர்களுக்கே விமானப் பயணச் சீட்டுக்களை வழங்கும்.

பொதுமக்களுக்கு விடுத்துள்ள சட்டவிதி நடைமுறையையே நாம் சகலருக்கும் கடைப்பிடிக்கின்றோம். அரசியல்வாதிகளுக்கும், கட்சிகளுக்கும் என்று வேறு நடைமுறைகள் எம்மிடம் இல்லை எனவும் அவர் தெரிவித்தார்.

இம்முறை யாழ். மாவட்டத்தில் தமிழ், சிங்கள அரசியல் கட்சிகளுடன் சிஹல உறுமய மற்றும் ஜேவி.பி. கட்சியினரும் போட்டியிடவுள்ளதாக அறிகிறோம். எவரும் அமைச்சிடம் பயண அனுமதிக்கு விண்ணப்பம் செய்து வழமையான விமானப் பயண நடைமுறைகளைக் கடைப்பிடித்தே அங்கு செல்ல வேண்டும் என்றும் அவர் கூறினார். (க)

### வன்னியில் முதல் வேட்புமனு நேற்றுத் தாக்கல்

வவுனியா,ஒக்.25

வன்னித் தேர்தல் மாவட்டத்தில் ஐக்கிய சோசலிஸக் கட்சி நேற்றுத் தனது வேட்புமனுவைத் தாக்கல் செய்தது.

வன்னியில் தாக்கல் செய்யப்பட்ட முதலாவது வேட்புமனு இதுவாகும். சின்னத்துரை முத்துராஜா தலைமையில் வேட்புமனுத் தாக்கல் செய்யப்பட்டது.

இதேவேளை,

அங்கு காஸி முஹம்மது அஸீஸ் என்பவர் சுயேச்சைக் குழுவின் சார்பில் போட்டியிடுவதற்குக் கட்டுப் பணத்தைச் செலுத்தினார். (ம-164)

### பொலீஸ்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சில மாதங்களுக்கு முன்னர் நாடாளுமன்றத்தில் இதே மேர்வின் சில்வாவுடன் ஏற்பட்ட கருத்து மோதலை அடுத்தே, ஐ.தே.கட்சியின் யாழ். நாடாளுமன்ற உறுப்பினர் தி. மகேஸ்வரன் செருப்பைத் தூக்கிக் காட்டி அவருடன் மோத முயன்றதாகச் செய்திகள் வெளியாகியிருந்ததும் குறிப்பிடத்தக்கது.

*(மற்றொரு செய்தி 7ஆம் பக்கத்தில்)* (உ)

### சடலம்..

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஓட்டோச் சாரதியான அருளானந்தம் குமார் என்பவரே அடையாளம் காணப்பட்டவராவர். அவரது சகோதரியான மனோகர் பத்மாவதி, ஓட்டோ உரிமையாளரான ஆர்.முத்துக்குமார் ஆகியோர் சடலத்தை அடையாளம் காட்டினர்.

இதேவேளை -

இவரது ஜீன்ஸ் பொக்கற்றிலிருந்து சயனைட் குப்பி ஒன்றும் இரு கைக்குண்டுகளும் நீதிவான் முன்பாக மீட்கப்பட்டிருப்பதாகப் பொலீஸார் தெரிவித்தனர்

இவர் சிவிலியனா அல்லது விடுதலைப் புலிகள் அமைப்பின் உறுப்பினரா என்பது குறித்து விசாரித்து அறிக்கை சமர்ப்பிக்குமாறு வவுனியா நீதிவான் எம்.இளஞ்செழியன் பொலீஸாருக்கு உத்தரவிட்டார். (ம-4-164)

### அடேல்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இந்நாள் வரை வெளியே அறியப்படாத புலிகளின் தலைமைத்துவத்தின் குணாம்சங்கள் பற்றிய தகவல்கள் மற்றும் தனித்துவமான படங்கள் என்பன இந்தப் புத்தகத்தில் இடம்பெற்றிருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டது.

புலிகளின் அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கத்தின் துணைவியாரான அடேல் பாலசிங்கம், 'யாழ்ப்பாண சமூகத்தின் சீதன நடைமுறை', 'விடுதலைப் புலிகளின் பெண் போராளிகள்' ஆகிய இரு நூல்களை ஏற்கனவே எழுதி வெளியிட்டவர் என்பது குறிப்பிடத்தக்கது. (உ)

### கூட்டமைப்பில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

உடனயடியாகக் காணப்படவேண்டிய தீர்வு குறித்து நான்கு அம்சக் கோரிக்கைகளின் அடிப்படையில் நான்கு தமிழ்க் கட்சிகள் இணைந்து கூட்டமைப்பு ஒன்றை அமைத்துள்ளன. எமது அமைப்பும் அதே கோரிக்கைகளையே வலியுறுத்தி வருகிறது. எனவே கூட்டமைப்பு அமைப்பதற்கு முன்னர் அது குறித்து எம்முடனும் கலந்தாலோசித்திருக்க வேண்டும். ஆனால் நான்கு கட்சிகளும் இரகசியமாகச் சந்தித்துக் கலந்துரையாடிக் கூட்டமைப்பை உருவாக்கியுள்ளன.

ஒரே கொள்கையுடைய சகல தமிழ்க்கட்சிகளையும் ஒன்றிணைத்துக் கூட்டமைப்பை உருவாக்கியிருக்கவேண்டும் என்பதுதான் நியாயமானதாகும். தற்போது உருவாகியுள்ள கூட்டமைப்பு ஒட்டுமொத்தமான தமிழ் மக்களின் ஏகோபித்த பிரதிநிதித்துவத்தைப் பிரதிபலிக்கவில்லை.

இந்தக் கூட்டமைப்பில் இணைந்து அதன் சார்பாக வன்னியில் நான் போட்டியிடுவதை கூட்டமைப்பில் அங்கம் வகிக்கும் ஒரு கட்சி விரும்பவில்லை என்றும், நான் யாழ்ப்பாணத்தில் போட்டியிட மற்றொரு கட்சி விரும்பவில்லை என்றும் கூறப்படுகின்றது.

இந்தக் கூட்டமைப்பின் சார்பில் நான் போட்டியிடுவதில் சிக்கல்கள் இருக்குமானால், தமிழ் மக்களின் நலன்களுக்காக தேர்தலில் விலகத் தயாராக இருக்கின்றேன்.

எமது அமைப்பு ஓர் ஆயுதக்குழுவென்று கூறப்படுகின்றது. கூட்டமைப்பில் அங்கம் வகிக்கும் ரெலோ, ஈ.பி. ஆர்.எல்.எவ். (சுரேஷ் அணி) ஆகியன ஆயுதங்களை வைத்திருக்கின்றனவே? தமிழர் விடுதலைக் கூட்டணியிடம் ஆயுதங்கள் இல்லையாயினும் அதன் தலைமையகம் மற்றும் யாழ். அலுவலகம் ஆகியன படை முகாம்கள் போன்றே உள்ளன.

விடுதலைப் புலிகள் அமைப்பின் அனுமதியுடன் தமிழ்க்கட்சிக் கூட்டமைப்பு தேர்தலில் போட்டியிடுவதாகக் கூறப்படுவது பொய்யான ஒரு விடயமாகும்.

விடுதலைப் புலிகளின் கொள்கை தமிழீழம் அமைப்பதே என்பதை எவரும் மறுக்க முடியாது. இலங்கை நாடாளுமன்றத் தேர்தலைப் பற்றி அவர்களுக்கு அக்கறை இல்லை. தமது கொள்கையில் அவர்கள் உறுதியாக உள்ளார்கள்.

இந்த நிலையில் விடுதலைப் புலிகள் ஆதரவு வழங்குவதான மாயையை தமிழ்க்கட்சிகளின் கூட்டமைப்பு ஏற்படுத்தியுள்ளது.

பேரினவாதக் கட்சிகளுக்கு ஆதரவு வழங்கும் எந்தக் கட்சியுடனும் நாம் கூட்டுச் சேரமாட்டோம். தமிழ்க் கட்சிகளின் கூட்டமைப்பு ஐ.தே.கட்சிக்கு ஆதரவு வழங்குகின்றபோதும், தமிழ்மக்கள் நலன் கருதி அதற்கு ஆதரவு வழங்க முன்வந்துள்ளோம்.

ஐ.தே.கட்சி ஆட்சிக்கு வந்தாலும் தமிழ் மக்களின் பிரச்சினைக்கு அதனால் தனியாகத் தீர்வு காண முடியாது. பொதுமக்கள் ஐக்கிய முன்னணியின் ஆதரவும் தேவை என்பதை இந்தக் கூட்டமைப்பு உணர்ந்து செயற்படவேண்டும் - இப்படிக் கூறினார் சித்தார்த்தன். (ம-3)

### கிரனேட் மீட்கப்பட்டதாம்!

யாழ்ப்பாணம்,ஒக்.25

நேற்றுமுன்தினம் யாழ்ப்பாணம் நாவலர் வீதி - கஸ்தூரியார் வீதிச் சந்திப் பகுதியில் வைத்து பொலீஸாரால், துப்பாக்கியால் சுடப்பட்ட பின்னர் கைது செய்யப்பட்ட இளைஞரிடமிருந்து கிரனேட் ஒன்று மீட்கப்பட்டதாக யாழ்.பொலீஸ் வட்டாரங்கள் தெரிவித்தன.

கடை முதலாளி ஒருவரிடம் ஒப்படைக்கும்படி தெரிவித்து பொதி ஒன்றை இளைஞர்கள் இருவர் தன்னிடம் தந்ததாகவும் -

அதனோடு சேர்த்து அவர்கள் தந்த கிரனேட்டையே தான் தன் வசம் வைத்திருந்ததாகவும் -

அந்த இளைஞர் பொலீஸ் வாக்குமூலத்தில் தெரிவித்திருப்பதாகவும்-

அந்த வட்டாரங்கள் மேலும் குறிப்பிட்டன.

இந்த இளைஞர் யாழ். ஆஸ்பத்திரியில் பொலீஸ் காவலுடன் சிகிச்சை பெற்று வருவது தெரிந்ததே (உ)

# மட்டு. - யாழ். அணிகள் இன்று மோதுகின்றன!

யாழ்ப்பாணம்,ஒக்.25

யாழ்.மாவட்ட கிரிக்கெட் சங்கம் இலங்கை கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபையினரின் அனுசரணையுடன் நடத்தும் மாவட்ட ரீதியிலான தேசிய கிரிக்கெட் சுற்றுப் போட்டியில் இன்று காலை 9.00 மணிக்கு வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி மைதானத்தில் நடைபெறும் ஆட்டத்தில் மட்டக்களப்பு மாவட்ட அணியை எதிர்த்து யாழ்.மாவட்ட அணி ஆடவுள்ளது.

குடாநாட்டில் தொடர்ச்சியாகப் பெய்துவரும் மழை காரணமாக ஏற்கனவே திட்டமிடப்பட்டிருந்த போட்டி அட்டவணையில் மாற்றங்கள் செய்யப்பட்டுள்ளன. (ம-7)

### 10 கிலோ நிறை அமுக்கவெடி மாதகலில் மீட்பு!

கொழும்பு,ஒக்.25

சிவிலியன் ஒருவர் கொடுத்த தகவலின் பேரில் மாதகல் - சில்லாலை வீதியில் புதைக்கப்பட்டிருந்த - சுமார் 10 கிலோ நிறையுடைய - அமுக்க வெடி ஒன்றைப் படையினர் கண்டுபிடித்து மீட்டிருப்பதாக விசேட ஊடகத் தகவல் மையம் தெரிவித்தது.

பொதுமக்கள் அதிகம் பயன்படுத்தும் வீதிகளில் இவ்வாறு புதைக்கப்பட்டிருந்த பன்னிரண்டு அமுக்க வெடிகளைப் படையினர் இந்த வருடம் மீட்டிருப்பதாகவும் அது தெரிவித்தது. (உ)

### கட்சி..

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இதற்கிடையில் -

இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸிலிருந்து பிரிந்து இலங்கைத் தொழிலாளர் ஜனநாயக முன்னணி என்ற கட்சியைத் தோற்றுவித்து செயற்பட்டுவந்த பி.பி.தேவராஜ், சென்னன், எஸ்.எஸ்.சாதாசிவம், எஸ. இராஜரத்தினம் ஆகியோர் எதிர்வரும் பொதுத்தேர்தலில் பொ.ஐ.முன்னணியுடன் இணைந்து போட்டியிட முடிவு செய்துள்ளனர். (உ)

### தமிழ்க்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கின்றது. மலையகத் தமிழ்க் கட்சிகள் மக்களைச் சுரண்டி வயிறு வளர்க் கின்றன.

எனவே ஐ.தே.கட்சிக்கும் ஏனைய சிறுபான்மைக் கட்சிகளுக்கும் - குறிப்பாக தமிழ்க் கட்சிகளின் கூட்டமைப்புக்கும் - வாக்களிப்பதைத் தவிர்ப்பதன் மூலம் விடுதலைப் புலிகளின் செயற்பாடுகளைத் தடுத்து நிறுத்துங்கள்.

- இவ்வாறு அவர் அங்கு மேலும் தெரிவித்தார். (ம-4)

### கேணல்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஒன்று தெரிவித்தது.

கிளைமோர் வெடிப்பினால் வைரவர் ஆலய முகப்புப் பகுதியும் பலத்த சேதமடைந்தது.

தாக்குதல் நடந்த கையோடு அப் பகுதிக்கு விரைந்த படையினர் அப்பிரதேசத்தைச் சுற்றிவளைத்துக் கொண்டனர். இதனால் யாழ். - பருத்தித்துறை வீதி ஊடான போக்குவரத்து சிறிதுநேரம் தடைப்பட்டது.

தாக்குதல் இடம்பெற்ற இடத்திலிருந்து 100யார் தொலைவில் குஞ்சர்கடை இராணுவ முகாம் அமைந்திருப்பதும் குறிப்பிடத்தக்கது.

பருத்தித்துறை மேலதிக நீதிவான் அ.பிரேம்சங்கர் நேற்று சம்பவ இடத்துக்குச் சென்று விசாரணைகளை நடத்தினார்.

(ம-15-117-173)

### புலிகள் தரப்பில் மூவர் உயிரிழப்பு!

பல்வேறு சந்தர்ப்பங்களில் தமது தரப்பில் உயிரிழந்த மூவரின் பெயர் விவரங்களை விடுதலைப் புலிகள் அறிவித்துள்ளனர்.

உயிரிழந்தவர்களின் விவரம் வருமாறு:-

கடந்த 23ஆம் திகதி அனந்தபுளியங்குளம் பகுதியில் இடம்பெற்ற எதிர்பாராத மோதலில் மேஜர் வள்ளுவன் (செல்வநாயகம் தங்கநாயகம் - யாழ்ப்பாணம்) என்பவரும் -

கடந்த 19ஆம் திகதி மன்னார்ப் பகுதியில் இடம்பெற்ற மோதலில் கப்டன் நிமலன் (வேலுச்சாமி ஜெயராஜ் - மாத்தளை), லெப்டினன்ட் தமிழினியன் அல்லது இனியவன் (திருச்செல்வம் சதீஸ் - வவுனியா) ஆகியோரும் - உயிரிழந்ததாக அறிவிக்கப்பட்டுள்ளது. (ம-164)

### ரூ.250 கோடி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

எதிராக ஐம்பது கோடி ரூபாவும் -

நஷ்டஈடு கோரி வழக்குத் தாக்கல் செய்யப்போவதாக மேற்படி இரு பத்திரிகைகளுக்கும் அமைச்சர் மங்கள சமரவீரவுக்கும் நிபந்தனைக் கடிதம் அனுப்பியிருக்கின்றார் முன்னாள் அமைச்சர் பேராசிரியர் ஜீ.எல். பீரிஸ். (உ)

### புலிகள்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

னதும் முக்கியமான கடமையாகும். இந்தக் கடமையில் இருந்து விலகுவது தேசத்துரோகமாகும் - என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை -

மேற்படி மகாநாயக்கர்கள் தேர்தல் ஆணையாளர், முப்படைகளின் தளபதிகள், பொலீஸ் மா அதிபர் ஆகியோருக்கும் கடிதங்களை அனுப்பி வைத்துள்ளனர்.

பொதுத் தேர்தலில் மோசடிகளில் ஈடுபடும் அதிகாரிகள் எந்தத் தரத்தைச் சேர்ந்தவர்களாயினும் அவர்கள் மீது உரிய நடவடிக்கை எடுக்கப்படவேண்டும் என்றும் -

தேர்தல் தொடர்பான பணிகளில் வெளிநாட்டுக் கண்காணிப்பாளர்களை ஈடுபடுத்துவதால் பெருந்தொகைப் பணம் செலவாகுமே தவிர பயன் ஏதும் கிடைக்கப்போவதில்லை என்றும் -

சுயநம்பிக்கை இருந்தால் கண்காணிப்பாளர்கள் எவரும் தேவை இல்லை என்றும் - அவர்கள் அந்தக் கடிதத்தில் தெரிவித்துள்ளனர்.(ம-7)


சாமகான வாத்திய பயிற்சி நிலையம்
ஓகன், ஹார்மோனியம், மெலோடிக்கா
புதிய வகுப்புகள் ஆரம்பம்
காலம் : 27.10.2001 சனிக்கிழமை
நேரம் : மாலை 3 மணி
இடம் : 676, K.K.S. வீதி, நாச்சிமார்கோயிலடி.
ஆசிரியர்: "இசைக்கலைமணி" ந.செல்வச்சந்திரன். (93807)

ரவி மோட்டர்ஸ் இடம்மாற்றம்
இல. 245, ஸ்ரான்லி வீதியில் இயங்கி வந்த எமது ஸ்தாபனம் தற்போது கீழ்க்காணும் விலாசத்துக்கு இடம்மாற்றம் செய்யப்பட்டுள்ளது என்பதை வாடிக்கையாளர்களுக்கு அறியத்தருகின்றோம்.
RAVE MOTORS
ரவி மோட்டர்ஸ்,
52, ஸ்ரான்லி வீதி (இலங்கை வங்கிக்கு அருகில்),
யாழ்ப்பாணம். (93815)

புதிய சங்கீத வகுப்புக்கள்
வியாபாரிமூலை வசந்தம் கலைக்கூடத்தில் சகல தரங்களுக்குமான புதிய சங்கீத வகுப்புக்கள் விஜயதசமியன்று ஆரம்பமாகவுள்ளன. பயில விரும்புவோர் உடன் தொடர்புகொள்ளவும்.
நிர்வாகம்,
வசந்தம் கலைக்கூடம். (93801)

புலமைப் பரிசில் வகுப்பு 2002
ஆரம்பம்:
26 - 10 - 2001
வெள்ளி - 4.00 p.m.
திரு.அருட்பிரகாசபிள்ளை (93829)

கணக்கீடு
திரு.பாலவாசன்
B.B.A. (F.M.Spl.)
A/L 2003
வங்கிக் கணக்கிணக்கக் கூற்று
Sat., Sun ⟹ 10 - 11 a.m.
ஆரம்: 27.10.2001 ⟹ 10 a.m.
BEACON
வெலிங்டன் சந்தியருகில். (93797)

BEACON
துரித மீட்டல்
வினா - விடை வகுப்புக்கள்
G.A.Q., B.A. part - I&II
அரசியல்
ஆசிரியர் : கேதீஸ்வரன்
ஆரம்பம் : 27.10.2001 (சனி)
நேரம் : காலை 8 மணி (மு.ப.) (93798)

உ
மாவை கொல்லங்கலட்டி பிள்ளையார் கோயில் மானம்பு விழா
நாளை மானம்பு உற்சவம் சிறப்பாக நடைபெறும். காலை 9.00 மணிக்கு தெல்லிப்பழை தடைமுகாமுக்கு வரவும் பஸ்ஸில் அழைத்துச் செல்லப்படும்.
- அறங்காவலர்.
(93832)


இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 25.10.2001இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.